# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2008
ஐப்பசி 7
துல்ஹஃதா 9
ஞாயிறு (23-10-1977)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 39
தொலைபேசி: 352
விலை சதம் 60


● தமிழ் மக்கள் கேட்கிறார்கள்;

## ஆகஸ்ட் கலவர ஆணைக்குழுவின் சேதி என்னுச்சு?

### காலம் கடத்தப்படுவதின் பின்னணி என்ன?

ஆகஸ்ட் இனக்கலவரம் பற்றியும் அப்போது பொலிசார் நடந்து கொண்ட விதம்பற்றியும் பூரண விசாரணை நடத்துவதற்கு ஓர் ஆணைக்குழு நியமிக்கப்படுமென்று பலதடவைகளில் பிரதமர் அறிவித்திருந்தார்; ஆனால் இந்த ஆணைக்குழு இரண்டு மாதங்களாகியும் இன்னும் நியமிக்கப்படாதது குறித்து தமிழ் மக்கள் மத்தியில் கவலையும் சந்தேகமும் ஏற்பட்டுள்ளது. ஆணைக்குழு நியமனம, புஸ்வானமாகிப் பொய்யாய்பழங் கதையாய்ப் போய் விடுமோ என்று தமிழ் மக்கள் அங்கலாய்க்கிறார்கள்.

அக்டோபர் முதல் வாரத்தில் தேசிய அரசுப் பேரவை கூடியபோதும், இந்த ஆணைக்குழு நியமனம் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்துக்கு பிரதமர் உறுதி கூறியிருந்தார். ஆணைக்குழு நியமிப்பதற்கு உரிய சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டதென்றும், மிகவிரைவில் ஆணைக்குழு நியமிக்கப்படும் என்றும் பிரதமர் அப்போது தெரிவித்திருந்தார். இந்த ஆணைக் குழுவுக்கு முன்னாள் பிரதமநீதியரசர் திரு. சன்சோனி தலைமை தாங்குவார் என்றும் கூறப்பட்டது.


ஆயினும் ஆணைக்குழு இன்னும நியமிக்கப்படவில்லை. ஆணைக்குழு நியமிப்பதில் காட்டப்படும் காலதாமதமும அக்கறையீனமும், தமிழ்மக்கள் மனதில் புதிய சந்தேகங்களையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

சூட்டோடு சூடு ஆணைக் குழுவைநியமித்து விசாரணை நடத்தினால் மட்டுமே உண்மைகளைக் கண்டுபிடிக்கவும், குற்றவாளிகளை அடையாளம் காணவும் ஏற்பட்ட இழப்புகளின் அளவை அறியவும் முடியும். காலங்கடந்து போனால் மக்களிடையே சோர்வும், சலிப்பும் ஏற்பட்டுவிடும்.

ஆணைக்குழு நியமிப்பதில் அரசாங்கம் அசிரத்தையும், அக்கறையீனமும் காட்டுவதேன்? ஏன் இதுவரை ஆணைக்குழு நியமிக்கப் படவில்லை? ஏனைய விஷயங்களில்தொட்டதற்கெல்லாம் விசாரணைக்குழு நியமிக்கும் அரசு, இந்தப்பாரதூரமான பிரச்சினையில் காலதாமதம் செய்வதேன்? என்று தமிழ் மக்கள் கேட்கிறார்கள்.

கலவரத்தில் ஆளும் யூ. என். பி. கட்சியினரும் சம்பந்தப்பட்டிருக்கலாமென்றும் ஆணைக்குழு விசாரணை நடத்துமானால் அதுவும் அம்பலத்துக்கு வந்துவிடுமென்றும், ஆகையால் ஆணைக்குழு நியமிப்பதற்கு யூ. என். பி. யின் உயர் மட்டத்தினர் சிலர் விரும்பவில்லையென்றும் கூறப்படுவது உண்

— 8ம் பக்கம் பார்க்க



## லண்டனில் வி.என். நவரத்தினம்

அண்மையில் பல்கேரியாவில் நடைபெற்ற சர்வதேச பாராளுமன்ற மாநாட்டில் கலந்து கொள்வதற்கு சென்றிருந்த திரு. வி. என் நவரத்தினம் பா. உ. அவர்கள் லண்டனில் தமிழ்ஈழ விடுதலைக்கு சார்பான தமிழர் இயக்கங்களுடன் கலந்துரையாடினார். வை. எம். சி. ஏ. இந்திய மாணவர் ஹாஸ்டலில்மகாத்மாகாந்தி மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து "ஈழவிடுதலை இலட்சியத்தில் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் பங்கு" என்ற பொருள் பற்றி திரு. நவரத்தினம் கருத்துரையாற்றியதுடன், அங்கு கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் விடையளித்தார்.

பல்கேரியா மாநாட்டுக்கு சென்றிருந்த காலஞர் பா. உ. பண்டிதர் இரத்தினமும் இதே மண்டபத்தில் 9-10-77ல் நடைபெற்ற இலங்கை இனக்கொலை கண்டனக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார் இக்கூட்டத்தில் பிரபல பிரிட்டிஷ் தொழிற்சங்கத் தலைவர் திரு. ஏர்னி ரோபர்ட்ஸ் அவர்களும் உரையாற்றினர் கறந்தபால் முலைக்கேருது; தமிழ் ஈழக் கோரிக்கை கைவிடப்படமாட்டாது என்று திரு. கா. பொ. இரத்தினம் இங்கு பேசுகையில் தெரிவித்தார்

## கேள்விப்படுகிறோம் உண்மையா?

* 11-10-77ல் யாழ் இணைப்பு அதிகாரி திரு. ருத்ரா ராஜசிங்கம் தன் கடமைகள் முடிந்து கொழும்பு திரும்பிய பின்னர்— மறுநாள் 12-10-77ல் உயர்தர பொலீஸ் அதிகாரியொருவர் யாழ்ப்பாணம் வந்திருந்தாரா?

* வந்தவர், யாழ் பொலீஸ் தலைமைக்காரியாலயத்தில் அங்குள்ள சிங்களக் காவலர்களை அழைத்து ஒரு வகுப்பை நடத்தினாரா?

* இந்த வகுப்பில் அவர் பேசுகையில் கலவரசமயத்தில் சிங்களக் காவலர்கள் யாழ்ப்பாணத்தில் நடந்து கொண்ட முறைக்கு ஒரு சபாஷ் போட்டாரா?

* தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தீவிரவாத இயக்கத்தினர்; அவர்கள் பொலீஸ் கண்காணிப் பாளரான திரு. சந்திர சேகராவையே கொலைசெய்ய முயன்ற சிவகுமாரனை வீரனாகப் போற்றிவணங்குபவர்கள்; அப்படிப்பட்டவர்களை அடக்குவதற்கு நீங்கள் மேற்கொண்ட வழியே சரியானது என்று அவர் சிங்களக் காவலர்களை பாராட்டினாரா?

* உங்கள் நலனை நாம் என்றும் பாதுகாப்போம்; உங்கள் 'நல்ல' வேலையை தொடர்ந்து செய்யுங்கள்; நீதிவிசாரணை நடைபெறுமானால், நீதவானால் மூன்று விதமான தீர்ப்புக்களையே தரமுடியும்; கொலை. கொலைமுயற்சி, அல்லது தற்கொலை என்ற தீர்ப்பையே தரமுடியும்→ மேற்கொண்டு அவரால் எதுவும் செய்யமுடியாது; அரசாங்க வழக்குத் தொடுநரே நடவடிக்கை மேற்கொள்ளமுடியும்— அதை நாங்கள் பார்த்துக்கொள்ளுகிறோம்; என்றவாறு அவர் பொலிசாருக்கு தெம்பூட்டும் வகையில் பேசினாரா?

* மேற்படி நிகழ்ச்சிகளை "மனச்சாட்சி" யுள்ள சிங்கள பொலீசாரே வெளியே ஒருவரிடம் கூறி மனம் புழுங்கியது உண்மையா?

கேள்விப்படுகிறோம்— இவையெல்லாம் உண்மையா?

## பிடிமண்ணெடுத்து தமிழ் அகதி சத்தியம்

"எமது சொந்த மண்ணை இந்தத் தமிழ்மண்ணை விட்டு ஒரு பொழுதும் நாம் வெறிபிடித்த சிங்களவர்களிடம் செல்லவே மாட்டோம்; மாறாக எம் உயிர்கொடுத்தேனும் இத்திரு மண்ணைக் காப்போம்!''

இவ்வாறு கொழும்புத்துறை அகதிமுகாமில் ஒருபிடி மண்ணைக் கையிலேந்தியபடி உணர்ச்சி பொங்கிட தமிழ் அகதிகள் சத்தியம் எடுத்ததுடன், தமிழ் மண்காப்போம் என்று வீர முழக்கமெழுப்பிய காட்சி நெஞ்சைப் புல்லரித்திட வைத்தது.

"கண்ணீரும் செந்நீருமே விடுதலையின் முன் அடையாளங்கள்" என்று கடந்த ஆவணித்திங்கள் இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களாக — கண்ணீரும் செந்நீரும் சிந்தியவாறு மாத்தறை, காலி, கொழும்பு, மாகோ, அநுராதபுரம் ஆகிய இடங்களிலிருந்து அபயம் தேடி ஓடிவந்த தமிழ்ச்சகோதரர்களிடம் நம்பிக்கை முத்தை விதைத்தார் அருள்திரு சிங்கராயர் அ. ம. தி. அடிகளார். இவ்வுண்மையை முற்றாக ஏற்றுக்கொண்ட பாதிக்கப்பட்ட சகோதரர் விடுதலையை நோக்கிச் செல்ல அடுத்த அடி எதுவென அங்கலாய்த்தனர், வழியைத் தெளிவாக்கியது அடிகளாரின் வாயிலிருந்து உதிர்ந்த "இனம் வாழ நிலம் வேண்டும்; தமிழன் வாழ தமிழ் நாடு வேண்டும்." எனும் முத்து.

பாதிக்கப்பட்டோர் இப்பொன்மொழியைப் பலத்த கரகோஷத்துடன் ஏற்றுக்கொண்டதுமன்றி நம் நாடாம் தமிழ்நாட்டின் மண்ணை எந்நாளும் காத்திடவேண்டும் என்ற திண்ணமான முடிவையும் எடுத்துக் கொண்டனர்: இதற்கு அத்தாட்சியாக பாதிக்கப்பட்டோரில் ஒருவரான திரு. வீரநாதன் சுப்பையா ஒரு பிடி மண்ணை எடுத்து எமது சொந்த மண்ணை இதை விட்டு ஒருபொழுதும் நாம் வெறிபிடித்த சிங்களவரிடம் செல்லவேமாட்டோம், மாறாக எம் உயிர் கொடுத்தேனும் இம் மண்ணைக் காப்போம்" என்று வீரமுழக்கம். செய்தார். உடனடியாக முதியோர் முதல் இளையோர் வரை ஆண்களும் பெண்களும் "தமிழ் மண்காப்போம்" என்று ஆவேசக் குரலெழுப்பினர்.

பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மண்ணைக் காத்திட ஒற்றுமைக் குரலெழுப்பிய அதேவேளையில் தாங்களும் தமிழரெனக் கூறிடும் சிலர், "நமக்குக் கல்விதான் முக்கியம். நம் சகோதரரின் உயிரல்ல; அவர்கள் எப்பாடுபட்

—8-ம் பக்கம் பார்க்க

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கர்ப்பிணிப் பெண்ணை தமிழச்சியை 24 சிங்களக் காடையர் கற்பழித்தனர்!

## காம மிருகங்களிடம் சிக்கித்தவித்து உயிரை விட்டனர் தமிழ் மாதர்




மலையகத்தில் நடைபெற்ற கொடுமைகள் சில பற்றி பன்விலையைச் சேர்ந்த எம். கே. சின்னையா பின்வருமாறு கூறுகிறார்:-

மாத்தளை இம்புலாந்தண்டை கிராமத்தில் 14 வயதுள்ள ஒரு தமிழ் சிறுமியை 15 பேர் சேர்ந்து கற்பழித்த கொடுமை தாங்காது அவள் உயிர் இழந்தாள். இன்னும் அதே இடத்தில் 3 பெண்கள் கற்பழிக்கப்பட்டுள்ளனர். பெற்ற தாய், தந்தை, உடன் பிறந்தசகோதரன் எல்லோரையும் கத்தியைக் காட்டி அவர்களைப் பார்த்திருக்கச் சொல்லிவிட்டு கற்பழித்திருக்கிறார்கள் மாபாதாகள்.

அந்தானை பெரிய தோட்டத்தில் 32 வயது வள்ளியம்மா என்ற பெண்ணை காடையர்கள் கொடூரமாகக் கற்பழித்ததால் அவளும் உயிர் துறந்தார். துணிச்கலை என்ற தோட்டத்தில் ஒரு கர்ப்பிணிப் பெண்ணை 24 காடையர்கள் கற்பழித்து இன்று அப்பெண் தன் உயிருக்காக போராடிக் கொண்டிருக்கிறாள். அதே இடத்தில் எத்தனையோ பெண்கள் கற்பழிக்கப்பட்டு விலைபோகாப் பொருளாக்கப் பட்டுவிட்டார்கள்.

நட்டுவாக்கலை தோட்டத்தில் காடையர்கள் லயத்தை எரித்து வயோதிபத்தாய் ஒருவரை உயிரோடு நெருப்பில் போட்டு சாம்பராக்கினார்கள்.

வத்துகாமம்நகரில் பொலீசுக்கு முன்னால் வி. எஸ். நாடார் என்ற கடைக்கு நெருப்புவைத்து அதன் காரணமாக 8 பிள்ளைகளின் தந்தையான திரு. சத்திவேல் என்பவரும், 26 வயதுள்ள லோகநாதன் என்பவரும் உயிரோடு எரிந்து சாம்பராயினர். அதே இடத்தில் 25 தமிழர் கடைகளுக்குதீவைக்கப்பட்டு கொள்ளையடிக்கப் பட்டுள்ளது.

●

ஊர்காவற்றுறை நாரந்தனையைச் சேர்ந்த இ. யோன்சன் அளவையில் நடந்த கொடுமைகள் குறித்து பின்வருமாது எழுதுகிறார்.

சோதனைக்கு மேல் சோதனை போதுமடா தமிழா, வேதனை தான் வாழ்க்கை என்றால் தாங்காது எம் நெஞ்சம். திரு. பீற்றர் இக்னேசியஸ்,(A.B.S. இரைசையா அன்ட் சன் உரிமையாளர்) கடந்த முப்பத்தைந்து ஆண்டு காலமாக தமது பாட்டனாரின் கடையாகிய மேற்கூறிய பிரசித்தி பெற்ற கடையை அளவையில் நடாத்தி வந்தார். திடுதிப்பென்று ஆவணி மாதம் 19ம் திகதி நடைபெற்ற அசம்பாவிதங்களின்போது, சிங்கள வெறியர்களின் அட்டூழியங்களை பொலிசார் அடக்க சக்தியற்ற முறையில் இருப்பதைக் கண்டு அவரின் சில சிங்கள நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, மாபாய் என்பவரின் இல்லத்தில் தம் கடையிலுள்ள சக ஊழியர்களுடன தஞ்சம் புகுந்தார்.

அளவையில் உள்ள கடைகளெல்லாம் ஏறக்குறைய காலை 11 மணியளவில்சூறையாடப்பட்டு, எஞ்சிய தளபாடங்கள் எரிக்கப்பட்டன. பண வெறி தீர்ந்தும் இரத்த வெறி தீராதவர்களாய், இவர்கள் தஞ்சம் புகுந்த வீட்டையும் மோப்பம் பிடித்துவந்து, இரும்புக்கம்பிகளாலும் பொல்லுகளாலும் ஈவு, இரக்கமின்றித் தாக்கினர். அங்கு ஏற்கனவே தஞ்சம் புகுந்திருந்த "இரட்ணசிங்கம்" உரிமையாளரும் அவரது சக ஊழியரும் மேற்கூறியவர்களுடன் சேர்ந்து தாக்கப்பட்டனர்.

திரு. பீற்றர் இக்னேசியஸ் ஸ்தலத்திலே உயிர் தந்தார். ஏனையோர் மூர்ச்சித்து நிலத்தில் கிடந்தனர். அவர்களை வைக்கோல்போட்டு; தேங்காய் எண்ணெய் ஊற்றித் தீமூட்டினர். அச்சமயம் தொலைபேசியில் வீட்டுரிமையாளரான மாபாய் இராணுவத்துடன்தொடர்புகொண்டதினால் அவர்கள் ஸ்தலத்திற்கு விரைந்து வந்து, மூட்டப்பட்டிருந்த தீயை அணைத்து, இறந்தவரையும் படுகாயப்பட்டோரையும் குருநாகல் வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர். இவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 12.

வைத்தியசாலையில் கோபால் என்பவர் உயிர்நீத்தார். இறந்தோரினதோ, காயப்பட்டோரினதோ விபரங்கள் அவர்களது சொந்த ஊருக்கு அறிவிக்கப்படவில்லை. அளவையில் இருந்து தப்பியோடி வந்த ஒருவரினால் இச்செய்தி மூன்று நாட்களின் பின்பு அறிவிக்கப்பட்டது, செய்தியை அறிந்ததும் குருநாகல்வைத்தியசாலைக்கு விரைந்து சென்ற போது இறந்த இருவரின் சடலங்களும் புதைக்கப்பட்டன என்ற அதிர்ச்சிதரும் தகவல் தான் கிடைத்தது ஆதலால் அவர்கள் காயப்பட்டோரை மாத்திரம் இங்கு கூட்டி வந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். அவர்களில் இன்னும் மூவர் யாழ் ஆஸ்பத்திரியில் இன்றும் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இவ்வாறு தமிழ்மக்களுக்கு பற்பல கொடுமைகளைச் செய்த சிங்கள வெறியர்களை நினைக்கும்பொழுது எமது இரத்தம் கொதிக்கின்றது. அவர்களால் இழந்த உயிர்களுக்கு எங்ஙனம் ஈடுசெய்ய முடியுமோ என்று எமது நெஞ்சம் ஏங்குகின்றது:

பேருவளை காலவிலை பீரீப் எஸ்டேட்டை சேர்ந்த வீ. கே. முனியாண்டி என்ற தமிழ் தொழிலாளி எழுதுவதாவது:.

கடந்த இனக்கலவரத்தின் போது துயருக்குள்ளான அப்பாவி தமிழ் பேசும் மக்களில் நானும் ஒருவன். எனது குடும்பத்தில் எனது மனைவியும், 28 வயது நிறைந்தஒரு ஆண்மகனும் இரண்டு பெண்பிள்ளைகளும் உண்டு. தற்போது நான்எனது மகன் சகிதம் மனைவியுடன் மேற்குறிப்பிட்ட எங்களுக்கென உலகத்தில் விதிக்கப்பட்ட 'லயத்தில்' வாழ்ந்து வருகிறோம். கடந்த மாதத்தில் இடம் பெற்ற சிங்களவெறியாட்டத்தின் போது நான் எனது வீட்டையும் அங்கிருந்த அசைவுள்ள ஆதனங்களையும் பூரணமாக இழந்து நடு ரோட்டில் விட்டுவிடப் பட்டுள்ளேன்.

காணி உச்சவரம்புச் சட்டமென்ற போர்வையில் உருவான தமிழ்மக்களின் தொழிலைப் பறிக்கும் நோக்குடன் அமுல் நடத்தப்பட்ட திட்டத்தின் நியதிப்படி எங்கள் மூவரினதும் தொழில் பறிபோய்விட்டது. தொழில் போனாலும் பரவாயில்லை என்று விழுந்துபடுக்க அந்த லயத்திலாவது தஞ்சமென இருந்தோம். அதற்கும் வந்தது வேதனை, இவ்வினக்கலவரத்தின்போது திட்டமிடப்பட்டபடி எங்கள் வீடு தீக்கிரையாக்கப்பட்டது. அங்கிருந்த எங்கள் 25வருட உழைப்பின் சேமிப்பு அக்கொடுந்தீக்கு இரையாகியது அச்சொத்துக்களின் பெறுமதி சுமார் 5,000/- இருக்கும் திட்டமிட்ட குழுவினர் எனது வாலிப மகனை கொலைசெய்யும் குறிக்கோளுடன் எங்கள் வீட்டைமுற்றுகையிட்டனர். வீட்டை நோக்கி அந்நேரத்தில் வந்துகொண்டிருந்த எனது மகன் மாடாசாமி இனவெறியர்களால் தாக்கப்பட்டான். அவனை காப்பாற்ற சென்ற எனது மனைவி ரத்தினம் (55 வயது) கடுமையாகத்தாக்கப்பட்டதுடன் காயத்துக்கும் உள்ளானாள். அவள் இது நிகழ்ந்த தினமான 24-8-77 முதல்19-9-77 வரை பேருவளை ஆஸ்பத்திரியிலும், தர்கா நகர் ஆஸ்பத்திரியிலும் சிகிச்சை பெற்றாள்; இன்னும் வாள்வெட்டுக்குட்பட்ட அவளது கால் பெரிய கட்டுக்களுடன் தான் தோற்றமளிக்கின்றது.

உயிர்தப்பினாலும் போதுமென்ற கோழை நெஞ்சுடன் நானும் எனது மகனும் காட்டில் சிலநாட்களும் விசுவாசமான ஒருமுஸ்லீம் வீட்டில் சில நாட்களுமங்கிருந்து உயிரை காப்பாற்றினோம் சிங்கள வெறியர்களின் ஆத்திரம் தணிந்து விட்டதனால் நாம் திரும்ப மறைந்திருந்த விடத்திலிருந்து வெளிவரவில்லை வயிற்றுப் பசி உயிர் பயத்தைப் போக்கியதனால் ஏதாவது கூலித் தொழில் செய்து வாழ உத்தேசித்து சிங்கள இனவெறியர்களுடன் கூடி வாழ்கிறோம். எங்கள் உயிர்கள் நிச்சயமற்றவை; திரும்ப எந்நேரத்திலும் சிங்கள வெறியர்களுக்கு அவை பலியாகுமோ தெரியாது.

அத்தோட்டத்தில் வேலையிழந்த நாள்முதல் வேறு தோட்டமொன்றில் வேலை கிடைக்கும்வரை கிடைத்த கூலித்தொழில்களைச் செய்து வந்தோம். எனது மகனுக்கு ஒரு தோட்டத்தில் வேலை கிடைத்தது. அதையாவது ஒழுங்காகச் செய்துவரவிடவில்லை இச்சமூகம்.

எங்களுக்கு இழைக்கப்பட்ட இக்கொடுமைகளை வலிப்பன்னைப் பொலிசில் சென்று முறையிட்டோம் அம்முறையீடுகளுக்கு எந்த விதமான பதிலையும் இது வரை நாம் பெறவில்லை. காயமுற்ற எனதுமனைவியின் சாட்சியம்கூட நீதியற்ற முறையில் ஆஸ்பத்திரியில் வைத்து பதியப்பட்டுள்ளது: இதற்கெல்லாவற்றுக்கும் அவர்கள் பயன்படுத்தும் ஒரே ஆயுதம் பயமுறுத்தலே. எங்களைப் போன்ற மற்றும் பல தமிழ் குடும்பங்களுக்கு இழைக்கப்பட்ட தீங்குகளை வெளியிடக் கூட அவர்களுக்கு உரிமை கிடையாது, அஞ்சி வாழும் சமூகம் அஞ்சியஞ்சிச் சாகவேண்டியது தானா? இதுதான் இறைவன் எங்களுக்குத் தந்தவிதியா? எங்களுக்குத் தகுந்த வாழ்வு வருமா?

●

திருகோணமலையை அடுத்துள்ள முதலிக்குளத்தில் 3ம் வாய்க்காலில் வைத்து சிங்கள இனவெறியர்களால் தமது தந்தை திரு. த. தோ. செல்லத்துரை படுகொலை செய்யப்பட்டது பற்றி அவரது மகள் எழுதுவதாவது;-

திருகோணமலையில் உவர்மலை வீதி என்னும் இடத்தில் குடியிருக்கும் எங்கள் தந்தை வயல் செய்வதற்காக பன்குளத்தில் உள்ள முதலிக்குளம் (மொறவேவ) சந்தியிலிருந்து உள்ளேயிருக்கும் (அதாவது சந்தியிலிருந்து 3மைல் தொலைவிலிருக்கும் 3ம் வாய்க்கால் என்னும் இடத்தில்) ஒரு பிரமாண்டமான குடிசையை கட்டுவித்து அங்கேயே குடியிருந்தார். வாரத்திற்கு இருமுறை எங்கள்வீட்டிற்கு வந்து எங்களைப் பார்த்துவிடடு வயலுக்குப் போய் விடுவார். அன்று ஆவணி மாதம் 6ம் திகதி சரியாக காலை 6மணியளவில் எங்களை வழமைபோல் பார்ப்பதற்காக அங்கிருந்து (பன்குளத்தில்) துவிச்சக்கரவண்டியில் மொறவேவச் சந்தியை நோக்கி வரத்தயாரானார். அப்போது கூப்பிடு தொலைவில் வைத்து 15 சிங்களக் காடையர்களால் வழிமறித்து அவர் ஓட்டிவந்த துவிச்சக்கரவண்டியை நொருக்கிவிட்டு பலாத்காரமாக அவரின் சொந்த வாடிக்கு இழுத்துச்சென்று வாளால் வெட்டியும் கிறீஸ் கத்தி போன்ற ஆயுதங்களால் குத்தியும் படுகொலை செய்யப்பட்டார். அதுமட்டுமன்றி அவரது உடலுக்கு டீசல், பெற்றோல் மற்றும் 5000 பெறுமதியான நெல் மூடைகளையும் அவர்மேல் போட்டு வீட்டோடு சேர்த்து தீயிட்டு விட்டு தங்கள் இனவெறி தணியும்மட்டும் நின்று உடல் கருகிய பின் அவ்விடத்தைவிட்டு வெளியேறினர்.

இச்சம்பவம் விடியற்காலை 6மணிக்கு நடந்தது. ஆனால் எங்களுக்கு மாலை 6மணிக்குத்தான் செய்தி தெரியவந்தது. இக்கொடூர கொலையைப் செய்தவர்கள் யாரென்பதை அறிவதற்கு அவ்வளவு நேரம் எடுக்கவில்லை. அங்கிருந்து தப்பியோடி வந்த எங்கள் தந்தையின் நண்பர் ஒருவர், உங்கள் வயலில் நாட்கூலிக்கு வேலை செய்யும் நயவஞ்சக இனத்துவேஷ வெறியர்கள் குறையுயிரோடு உங்களது அப்பாவின் வாடியில் வைத்து அவரை எரித்து விட்டார்கள் என்று சொன்னார். அவர்களின் பெயர்களைக் கேட்டபோது எங்களுக்கே ஆச்சரியமாக இருந்தது. காரணம் அவர்கள் எல்லோரும் கூடப்பிறந்தவர்கள் போல் பழகிவந்தவர்கள். இப்படி ஒன்றாக எங்கள் அப்பாவுடன் பல தடவை அந்தவாடியிலிருந்து உணவருந்தியவர்கள். இப்படிப்பட்டவர்கள் இந்த

—7ம் பக்கம் பார்க்க



திருகோணமலையை அடுத்துள்ள முதலிக்குளத்தில் கொலைசெய்யப்பட்ட திரு. த. தோ. செல்லத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பெரும் சக்தியும் மூளுக!

மலைமகளே!
உந்தன் மலர்ப்பாதம் தோளில்
நிலைகொண் டிடுக!
விழியில் நெருப்பெழுக!
தக்கர்வெறி யாட்டம் தலைதூக்கி......
தாய்மடியில்
கொப்பளித்துப் பாய்ந்த
குருதியில் மூழ்கிவந்தோம்!
எப்பொழுதும் கோழையென
எம்மைஎடை போட்டுவரும்
மேதி யரக்கர்களை மோத எழுகின்றோம்
சாதி இனபேதம் சங்கரித்த சங்கரியே!
நீதி நிறைகாக்கும் நின்கைவாள்
ஓய்ந்த தென்ன?
கண்ணகியாய் வந்து
கனல்செய்தாய் பாண்டியனை;
மணணில் திரௌபதியாய்
வந்தழித்தாய் மண்சுமையை!
நெஞ்சிற் படிந்த நிணங்கள்
குணமடைய,
கொஞ்சம் உனதுகனற் கூர்விழியைக்
காட்டிடுக!
ஆடுப் பலிக்கீடாய் ஆட்பலி கொள்வதற்கு
நாட்டில் கொடிய
நரவரக்கர் தோன்றிவிட்டார்!
ஆடடிப் படைக்கும்
அரக்கர்வெறி தீர்ப்பதற்கும்
நாட்டில் நினதுகொடி
நல்லாட்சி செய்வதற்கும்,
எங்கள் தளபதி நீ ஏறிவரும் சிங்கமென
சங்கம் முழங்கி. சதுராடி
வெல்வதற்கும்
எங்கேயுன் கைவாள் எடு!

●

அலைமகளே!
உந்தன் அருஞ்செல்வம் கையிலுற்றேன்!
நேரித்த மண்வளமும்,
நேச மனவளமும்
பூரித்து நிற்கும் புவியில் நீ வாழுவது
உண்மையென்றால்......
எங்கள் உரிமை மலரட்டும்!
பண்ணூர் களனிகளும்,
பாயந்துவரும் ஆறுகளும்,
ஆர்கடலின் பேறும், அழைந்த தொழில்பலவும்,
சீர்த்த தமிழீழம்
சிங்களவர் சொத்தானால்...
செங்கமலம் பூக்கும் திருநாடு எந்நாடோ...?
மங்கை உனக்கு மலரிதயம்
தந்துழைத்தோர்
அங்கை விரித்து அகதிகளாய் நிற்கின்றோம்!
சங்கையினைக் காக்கச்
சமர் மூண்ட வேளையிது!
பொங்குக நின் போதை புகட்டும்
விழிப்பார்வை!
வையத்தோர் செல்வமெல்லாம்
வந்து குவிதற்கும்,
ஐயோ! ்வன் றிவ்வுலகம்
ஆதரவு நல்குதற்கும்,
தையல் உனது தயவொன்றே வேண்டுமடி
மைவிழியா ளூட்டு மலர்ச்சி!
கலைமகளே!
உந்தன் கருணை விழி எங்கே?
தலைமகளாம் அவ்வை தவிடுபொடி!
வள்ளுவனார்,
உள்ளம் உடைய உருக்குலைந்தார்!
பாரதியின்,
வெள்ளை இதயம் வெடித்துளது!
கொஞ்சு தமிழ்த்
தாத்தா, நவாலிதந்த தங்கப்
புலவர் பிரான்,
பந்தாடப் பட்டுப் பரதேசி யாகிவிட்டாள்!
எங்கே...?
தமிழ் பிறந்த இன்ப புரியான,
எங்கள் தமிழீழ இதயம், எனத்தக்க
யாழ் நகரில், நாமகளே!
நீ வளரும் நேசப் புவியலவோ?
வங்கப் பரவையிலே
சங்கம் முழங்கு தமிழ்
சிங்களவன் கையில் சிறைப்பட்டு வருகிறான்!
வெள்ளைக் கலையுரிந்து,
வீதியிலே கற்பழிக்கும்
காட்டு மிராண்டிகளின்
வீட்டிலிடி வீழாதோ?
பாவேந்தர் நாவில்
பதம்வைத்து ஆட்டியநீ
கோவேந் தரியணையை கொள்ளவழி
காட்டாயோ......?
முத்தமிழைப் போன்ற முதுகுரவர்—
தந்தை செல்வா,
புத்திவாள் ஏந்தும் நம் பொன்னம் பலனார்,
திருச்செல்வம் என்ற தினகரனார்;
மூவர் தருக்கத் திறமையிலே
தாளூன்றி நின்றவள் நீ!
சட்டம் அமைப்பு, தவிடுபொடி யாய்த்தகர
பட்டாங் குரைத்தவள் நீ!
பைந்தமிழாய் வாழ்பவள்நீ!
சிங்கத்தின் விந்துச் சினைப்பிலே
வந்தஇனம்
பங்கப் படுத்த. பணிந்து நடப்பாயோ......?
பொற்றா மரையும்,
புகழ்சேர் கலையோடும்,
நீரை நெருப்பை நிறைகண்ட
சத்தியமும்,
ஈழத் தமிழகத்தில் என்றும் நிலைத்தற்கும்,
வாழும் புலவன் மலர்கள் புனைவதற்கும்,
எங்கள் வழியின் இடர்ப்பாடு நீக்கி, யறச்
சங்கப் பலகையினைச் சார்! —பாண்டியூரன்




ஏ. கே. சண்முகராஜா,
பிரதான வீதி
மட்டக்களப்பு

கே: கிழக்கு மாகாண மக்கள் ஒற்றையாட்சியையே விரும்புகின்றனர் என்று கூறுகிறாரே திரு. தேவநாயகம்? இது சிந்திக்க மறந்ததனாலா அல்லது வேறு காரணங்களுக்காகவா?

ப: கிடைத்த மந்திரி பதவியில் இறுக்கமாக ஒட்டிக்கொண்டு இருப்பதற்கு இப்படிப்பட்ட பேச்சுக்கள் தானே உதவும்?

கே: கவிஞர் காசிஆனந்தனின் எதிர்காலம்— விடுதலைப் பயணத்தில் அவர் பணிகள் எவ்வாறு அமையும்?

ப: இயக்கம் என்ன கட்டளையிடுகிறதோ — அந்த முறையில் அமையும்.

ஃ

எஸ். சுப்பிரமணியம்,
கொழும்பு. 3

கே: பிரதமருடன் விருந்து சாப்பிட ஹோட்டல் ஒப் ரோய்க்கு கூட்டணி பா. உ.க்கள் சென்றது சரியா?

ப: சரியென்று எப்போது சொன்னேன்? ஆனால் எந்த விருந்துக்குப்போனாலும் அந்த விருந்தில் மயங்கிடாமல்— ஆரியக்கூத்து ஆடினாலும் காரியத்தில் அதாவது இலட்சியத்தில் கண்ணாக இருப்பார்களானால்—அது போதும் நமக்கு! ஒரு சுருட்டுக்கும், ஒரு கோப்பை தேநீருக்கும் தமிழர்களை விலைக்கு வாங்கமுடியாதென்பதை இந்த விருந்தின்போது ஜே. ஆருக்கு நம்மவர்கள் உணர்த்தியிருந்தால் அதுபோதும் நமக்கு!

ஃ

செல்வராசா,
4ம் குறிச்சி,
ஏறாவூர்.

கே: இந்தத் தேர்தலுடன் கவிஞர் காசிஆனந்தன் அரசியலிலிருந்து ஒதுங்கிவிடுவாரா?

ப: அவர் தேர்தலுக்காக அரசியலுக்கு வந்தவர் அல்லவே!

ஃ

க. கந்தசாமி
கொழும்பு-11.

கே: மட்டக்களப்பு பா.உ திரு. செ. இராசதுரையின் தேர்தல் வெற்றி அவரது தனிப்பட்ட வெற்றியென்றும், கூட்டணியின் வெற்றியல்லவென்றும் கல்குடா தேவநாயகம் கூறியிருப்பதற்கு உங்கள் பதில் என்ன?

ப: தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதும், மட்டக்களப்பு கச்சேரியில் திரு. இராசதுரையே இதற்குப் பதில் சொல்லி விட்டாரே— அதாவது தமக்கு கிடைத்த வெற்றி தமிழர் கூட்டணியின் தமிழ்ஈழ இலட்சியத்துக்கும் தந்தை செல்வாவின் கொள்கைக்கும் கிடைத்த வெற்றியென்று வெற்றி பெற்றவரே அழுத்தமாக அறிவித்துவிட்டபின்னர் தேவநாயகமும் தினபதியும் எப்படியும் அலட்டிகொள்ளட்டுமே!

ஃ

கந்தசாமி,
அட்டன்.

கே: பிரதமர் ஜே. ஆர். அவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: ஆழம்காண முடியாத அரசியல் தந்திரி; அழகாக இனிமையாகப் பேசுகிறார், பாலும், தேனும் சொட்டுகிறது அவரது வார்த்தைகளில்; ஆனால் அவை செயல் வடிவம் பெறுமா என்பதே கேள்வி!

கே: தமிழர் சிங்களம் படிப்பதை நீங்கள் எதிர்ப்பது இனவாதம் அல்லவா?

ப: ஒருபோதும் இனவாதம் ஆகாது — இன்று நாம் வேண்டி நிற்பது நமது தாயகத்தின் சுதந்திரம் அந்த சுதந்திரம் கிடைக்கும் வரை நம் மீது ஆதிக்கம் செலுத்தி நம்மை அடக்கியாள நினைக்கும் ஏகாதிபத்தியவாதிகளின் மொழியை நாம் ஏற்க மாட்டோம் என்று கூறுவது எப்படி இனவாதமாகும்? ஆட்சிமொழியாக தனிச்சிங்களமும் அடிமை மொழியாக தமிழும் இருக்கின்ற இன்றைய நிலையில் தன்மானமுள்ள தமிழன் எவனும் சிங்களத்தை ஏற்றுக்கொள்ளமாட்டான்!

ஃ

ஜே. சொரூபா
கொட்டாஞ்சேனை,

கே: அகதிகள் முகாம்களில் யாழ்ப்பாணத் தமிழன், மலையகத் தமிழன் என்ற வேறுபாடு காண்பிக்கப்படுகிறது உண்மையா? இப்படிக் கூறுபவர்களுக்கு தாங்கள் கூறும் பதில் என்ன?

ப: அப்படி தமிழருக்கிடையே வேறுபாடு யாராவது காண்பித்தால் அவர்களே தமிழ் சமுகத்திலுள்ள புற்றுநோய்க் கிருமிகள் என்பேன்!

ஃ

சியாமளா,
கொழும்பு-13

கே: இலங்கையில் உள்ள தமிழர்கள் ஆகஸ்ட் மாதத்தில் அடி உதை வாங்கியதனால் தமிழினத்துக்கு நன்மையா தீமையா?

ப: தமிழனுக்கு அவனது அடிமைநிலையை உணர்வித்து 'ஐக்கியதேசிய' மயக்கத்தை போக்குவித்தது சிங்களவனின் அடி! அந்த வகையின் நன்மையே!

★ கேள்விகள் அனுப்ப வேண்டிய முகவரி:-

திருவாளர்கள் குயுக்தியார்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

# வவுனியா நகரில் உண்மையில் நடந்ததென்ன

8-10-77 சனிக்கிழமை வவுனியா நகரில் நடைபெற்ற உண்மையான சம்பவம் என்ன என்பதை வவுனியா மாவட்ட த. வி. கூ. கிளை செயலாளர் திரு. ம. பி. இராசநாயகம் நமக்கு அனுப்பிவைத்துள்ளார். 16-10-77ல் வெளிவந்த சுதந்திரனில் இடம் பெற்ற செய்தியில் சில தவறுகள் இடம்பெற்றுள்ளதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். திரு. இராசநாயகம் எழுதியிருப்பது வருமாறு:-

தங்களது 16.10.77ல்வெளியீடான சுதந்திரனின் 3-வது பக்கத்தில் வவுனியாவில் பற்றி வந்த செய்தியின்படி சிங்களக் காடையர்கள் தேன் சுரபிக் கடையில்சாப்பிட்டுவிட்டு காசு கொடுக்க மறுத்ததினால் ஏற்பட்ட கலவரம் என்றே குறிப்பிடப் பட்டுள்ளது. இவ்விதமே காடையர்களின் முறையீட்டிலும் கூறப்பட்டுள்ளது. ஆனால் இது முற்றிலும் தவறானது. உண்மையில் நடந்த சம்பவம் வருமாறு:-

ஆகஸ்ட் மாதத்தில் வவுனியாக் கடைகளை கொள்ளையடித்து தீக்கிரையாக்கிய சம்பவத்தின் பொருட்டு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலையான நபர் ஒருவரின் தலைமையில் சிங்களக் காடையர் கோஷ்டி ஒன்று பகல் 12 மணியளவில் கொறவப்பத்தானை வீதியிலுள்ள சென் அன்ரனிஸ் ஹோட்டல்,அதற்கு அருகாமையில் உள்ள இன்னோர் கடையும், ஜோதிமாளிகை ஆகியவற்றில் குழப்பம் விளைவித்து இவற்றின் முதலாளிமார்களுக்கும் சிப்பந்திகளுக்கும் கடைக்குமுன் நின்றவர்களுக்கும் அடித்தனர். அச்சமயம் தொலைபேசியின் மூலம் ஆசிகுளம் கிராமசேவையாளர் நவரத்தினம் பொலிசிற்கு அறிவித்தார். ஆனால் பொலிஸ் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை. பின்னர் கோஷ்டி முருகேசு ஸ்ரோஸ் வேல்கபே ஆகியவற்றிற்குச் சென்று அங்குள்ளவர்களுக்கும் அடித்தனர் வேல் கபேயின் உரிமையாளர் உடன் கடையை பூட்டிவிட்டு பொலிசிற்கு தகவல் கொடுக்கச்சென்றார். ஆயினும் அவரின் தகவலை பொலிசார்

—6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்மொழித் திட்டம் நம் இனம் அழிக்கும்!

**அன்பு நண்பா,**

சீரிளமைச் செந்தமிழை — ஈழத்தமிழி
னத்தை—ஊடுருவி அழிக்கின்ற ஒரு திட்ட
மிட்ட சதியே சிங்கள ஏகாதிபத்தியவாதிக
ளால் இப்போது இனிப்புத்தடவி முன்வைக்
கப்படுகின்ற மும்மொழித்திட்டம் என்பதனை
சென்ற இதழிலே நான் உனக்கு எழுதிய மட
லிலே எடுத்துக்காட்டியிருந்தேன்; என் கருத்
துக்களைப்படித் திட்டதால், மும்மொழித் திட்
டம் ஒரு நல்ல திட்டம்தான் என்று உள்ள
படியே நம்பி—அதிலே 'மயங்கித்தியங்கி'' நின்
றிருந்தோருக்கு சற்று சிந்தனைத்தெளிவு ஏற்
பட்டிருக்கும் என்று நம்புகிறேன்; அதே சம
யத்தில். இனவெறியன், வகுப்புவாதி, துவே
ஷம் பிடித்தவன், குழப்பத்தைதூண்டுகிறான்,
நாட்டில் தேசிய ஒருமைப்பாடு ஏற்படுத்தும்
நல்லதோர் திட்டத்தை குழப்பிவிடப் பார்க்
கிறான்—என்றெல்லாம் என்மீது 'தேசிய ஐக்
கியம்' என்ற கானல் நீரை இன்னும் நம்பி,
கொழும்பில் தொடர்ந்து சொகுசான வாழ்
க்கை வாழ்ந்திடலாம் என்று நம்பிக் கொண்
டிருக்கும் 'பெரிய மனிதர்கள்' என் மீதும் சுதந்
திரன் மீதும் அர்ச்சனைகள் செய்திருக்கக்
கூடும்; சிங்கள ஏகாதிபத்திய வாதிகள் தமது
சதி நோக்கம் அம்பலப்படுத்தப்பட்டு விட்
டதே என்று ஆத்திரம் அடைந்திருக்கக் கூடும்!

நண்பா, யார் என்ன நினைத்த போதிலும்—
யார் என்ன சொன்ன போதிலும்—தமிழ் சமுதா
யத்துக்கு எது நன்மை தருமோ அதை நாம் வர
வேற்போம்; எதுஎது தீமை பயக்குமோ அதை
அதையெல்லாம் யாருக்கும் அஞ்சாமல் — யார்
ஏசினாலும், வைதாலும் வசைபாடினாலும் — அச்
சுறுத்தினாலும், அடக்கு முறையை ஏவி விட்டா
லும் எதிர்த்து நிற்பதில் சுதந்திரனும், எனது
பேனாவும் தயவு தாட்சண்யமின்றி முன்னிற்கும்
என்பதை இச்சமயத்தில் சுட்டிக்காட்டிட விரும்பு
கிறேன்!

மும்மொழித்திட்டத்தின்படி சிங்களவர்
களும் தமிழ் படிக்கவேண்டும்தானே; அப்
போது, தமிழர்களும் சிங்களம் படிப்பதால்
என்ன பிழை? என்பதே சிலரால் மேலோட்ட
மாகக் கேட்கப்படுகின்ற ஆழமற்ற கேள்வியா
கும்!

இத்தீவின் இன்றைய அரசியல் அமைப்புச்
சட்டப்படி, தமிழ் ஈழம் உட்பட முழுநாட்டி
னதும் ஆட்சி அதிகாரம் முழுவதும் சிங்கள
வர்களின் கைகளில்! நாட்டின் ஆட்சி மொழி,
உத்தியோக மொழி, தேசிய மொழி அனைத்
தும் சிங்களம் மட்டும்; நாட்டின் அரசாங்க
மதம் பௌத்தம்; எண்ணிக்கைபலத்திலும்
சிங்கள பௌத்தர்களே பெரும்பான்மை
யினர்; இந்நிலையில் அவர்கள் (மனம் விரும்பி
னால்) தமிழ் மொழியைமட்டுமல்ல— சீன
மொழியை, ஜப்பான் மொழியை, வேறு எந்த
மொழியையும் படிக்கலாம்—அல்லது படிக்கா
மல் விடலாம்; அது அவர்களைப் பொறுத்த
விடயம்!

ஆனால் நண்பா, சிங்களமக்கள்—சிங்கள
இனம்— வசிக்கின்ற அதே இடத்தையா இத்
தீவில் தமிழினம் வசிக்கின்றது? அதைத்தான்
நாம் சிந்தித்திடவேண்டும்!

தமிழுக்கு சிங்களத்துடன் இருந்த சம
உரிமை பறிக்கப்பட்டு 21 ஆண்டுகளாகிவிட்
டன; தமிழ் மொழி தாழ்த்தப்பட்டு, ஒதுக்கப்
பட்டு, புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கிறது;
நாட்டு நிர்வாகத்தில்—கல்வியில்— பொருளா
தாரத் துறைகளில்—தொழில்களில்— தமிழ்
சமுதாயம் ஒதுக்கப்பட்டுக் கிடக்கிறது; அர
சாங்க அலுவலகங்களில், கூட்டுத்தாபனங்
களில் தமிழர்கள் அங்குள்ள சிங்கள சில்லறை
ஊழியர்களால் அடித்து விரட்டப்பட்டு, படு
கொலை செய்யப்படுகிறார்கள்; தமிழ் பேசும்
மக்களின் பாரம்பரிய பிரதேசம், திட்டமிட்ட
சிங்களக் குடியேற்றத்தினாலும், வேறு வழிகளி
லும் சிங்கள ஏகாதிபத்தியவாதிகளினால் ஆக்
கிரமிக்கப்பட்டு, தமிழர் தாயகமாம் தமிழ்
ஈழம், சிங்கள பௌத்த ஏகாதிபத்திய வாதி
களின் 'கொலனி' யாக்கப்பட்டுள்ளது; தமிழ்
ஈழத்தில் சிங்கள ஏகாதிபத்திய ஆயுதப்படை
கள் கைப்பற்றப்பட்ட பிரதேசத்தில் வெறி
யாட்டம் போடுவதுபோல தமிழர்களை கொடு
மைப்படுத்திவருகின்றன! தமிழினம் அடிமை
யாக்கப்பட்டு— அடிமையிலும் கேவலமாக—
பொட்டுப்பூச்சிகளாக நசுக்கப்பட்டு மிதிக்கப்
பட்டு, கொடுமைப்படுத்தப்பட்டு, கொலை
செய்யப்பட்டுவருகிறது! தமிழர் மதங்கள்
புறக்கணிக்கப்படுகின்றன; தமிழர் கோவில்
கள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன! தமிழன்
உயிருக்கு உடமைக்கு இந்நாட்டில் பாதுகாப்பு
கிடையாது; வனவிலங்குகளுக்கு தரப்பட்டிருக்
கும் பாதுகாப்பு கூட இத்தீவில் தமிழர்களாக
பிறந்தவர்களுக்குக் கிடையாது!

இந்தக் கொடுமைகளுக்கு—இந்த அநீதிக
ளுக்கு—அரசின் மொழித்திட்டம் — அதாவது
தமிழர் சிங்களத்தையும். சிங்களவர் தமிழை
யும் படித்திடுவது எப்படித் தீர்வுகாண முடி
யும்? நோயின் காரணம் எதுவோ இருந்திட
வேறு எதற்கோ வைத்தியம் செய்ய நினைக்
கின்றார்கள்! அதாவது நோயாளியை—தமி
ழினத்தை—ஒரேயடியாக ஒழித்துக்கட்டி விடு
வதன் மூலம் நோயைத் தீர்த்துவிட திட்டம்
தீட்டுகிறார்கள்!

தமிழ் பிள்ளைகளுக்கு அவர்களின்
தாய்மொழியான தமிழே கட்டாய
போதனா மொழியாக இருந்திடவேண்டு
மென்ற கொள்கையை — அக்கொள்
கைக்கு சட்ட அங்கீகாரம் வழங்கு
வதை — ஏற்றுக்கொள்ளாத யூ. என்.
பி. அரசு — 1965ம் ஆண்டில் தமிழர
சுக் கட்சியுடன் சேர்ந்து ஆட்சி நடத்
திய காலத்திலேயே இநதத் தாய்
மொழிக் கட்டாய போதனையை ஏற்
றுக்கொள்ள மறுத்தவர்களின் அரசு—
இப்போது தமிழர்களுக்கு இரண்டா
வது கட்டாயமொழியாக சிங்களத்தை
போதிப்பதற்கு ஆலோசிக்கிறதென்
றால் — இதன் பின்னாலுள்ள சதியைப்
நாம் ஊகிக்கமுடியும்!

தாய்மொழியில் — தமிழ்மொழி
யில் — கட்டாய போதனைக்கு சட்ட
அங்கீகாரம் கிடையாது; ஆனால் அதே
சமயம் இரண்டாவது மொழியாகச்
சிங்களத்தை கட்டாய மொழியாகப்
பயிலவேண்டுமென்று சட்டம் வருமாக
இருந்தால் — அதன் கெட்ட நோக்
கத்தை நாம் புரிந்துகொண்டு அதை
எதிர்க்கவேண்டும்!

## அரசியல் மடல்

நண்பா, நமக்கு இன்னோர் மொழி மீது—
குறிப்பாக சிங்கள மொழிமீது வெறுப்பு
கிடையாது—துவேஷம் கிடையாது. ஆனால்
நமது மொழியையும், நமது தனித்துவத்தை
யும் நாம் பாதுகாத்துக் கொள்ள விரும்புகி
றோம்! நமது இனத்தையும், மொழியையும்,
தனித்துவத்தையும் பாதுகாத்திட நாம்மேற்
கொள்ளும் நடவடிக்கைகள், சிலருக்கு கசப்
பாக தெரிகிறது என்றால் — துவேஷமாகத்
தெரிகிறது என்றால்—அதற்கு நாம் என்ன
செய்திட முடியும்?

1956வரை—அதாவது தமிழ் மக்களை அவ
மதித்து இரண்டாந்தர நிலைக்கு தள்ளிய சிங்
களம் மட்டும் என்ற கொடூர சட்டம்கொண்டு
வரப்படும்வரை-தமிழர்கள் சிங்களமொழியை
தங்கள் பாடசாலைகளில் தாமாகவே
விரும்பிப்படித்தார்கள் என்பதை இதற்குள்
யாரும் மறந்திருக்க முடியாது; என்றைக்கு
தமிழினம் தாழ்த்தப்பட்டு சிங்களம் மட்டும்
சட்டம் வந்ததோ — அன்றிலிருந்து தமிழ்
மக்கள் சிங்களத்தை படிக்க மறுத்து, அதை
ஓர் எதிர்ப்பியக்கமாக நடத்திவருகிறார்கள்!

1956ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அதே
சிங்களம் மட்டும் என்ற பாஸிஸ சட்டம் ஒரு அட்
சரமும் மாற்றப்படாமல் இன்றும் அப்படியே அர
சியல் சட்டத்திலிடம் பெற்றிருக்கிறது; சாதாரண
சட்டமாக இருந்துவந்த அச்சட்டம். அரசியல் சட்
டத்திலேயே ஓர் அம்சமாகிவிட்டது; அச்சட்டம் மாற்
றப் பட்டு, சிங்களத்துடன், தமிழும் சமஉரிமை
யுள்ள ஓர் அரசாங்க மொழியாக அரசியல் சட்டத்
திலிடம் பெற்றாலன்றி — சிங்களத்தைப் படிப்ப
தில்லை என்று 21 ஆண்டுகளுக்குமுன் தமிழர்
பூண்ட இலட்சிய விரதத்தை கைவிடுவதற்கு எது
வித காரணமும் இல்லை!

எனவே, தமிழ் மக்களை சம உரிமையுள்ள
மக்களாக நடத்துவதுதான் ஜே. ஆர். அவர்
களின் புதிய அரசாங்கத்தின் கொள்கையென்
றால் — அக்கொள்கையை அரசு உதட்டளவி
லன்றி உள்ளத்தளவில் பின்பற்றுவது உண்மை
யானால்— முதலில் செய்யப்படவேண்டியது
தமிழினத்தை இரண்டாந்தர நிலைக்குத்
தாழ்த்தியுள்ள சிங்களம் மட்டும் என்ற சட்
டத்தை திருத்தி, தமிழுக்கும் சிங்களத்துக்கும்
சம உரிமையை அரசியல் சட்டரீதியாக உறு
திப்படுத்துவதே! இதைச் செய்தால் — அதா
வது சிங்களமும் தமிழும் சம அந்தஸ்துள்ள
அரசாங்கமொழிகளாக்கப்பட்டுவிட்டால்—
இரு இனத்தினரும் இரு மொழிகளையும் சம
நிலையிலிருந்து படிக்கமுடியும்! இதைச் செய்
யும் தெம்பு, திராணி துணிவு பிரதமருக்கு
உண்டா? இதற்கு சிங்களவர் சம்மதிப்பார்
களா?

இன்றைக்கு மும்மொழித்திட்டம் பற்றிப்
பேசுகின்ற பிரதமருக்கு— தமிழ்மக்களை சம
உரிமையுள்ள மக்களாக நடத்துவதுதான்
நோக்கமாக இருந்திடின்— இரு இனத்தவர்
களும் ஒருவர் மொழியை மற்றவர் அறிந்து
கொள்வதுதான் அவரது நோக்கமாக இருந்தி
டின்— பாரபட்சங்களை போக்குவதுதான் அவ
ரது எண்ணமாக இருந்திடின்—சுலபமாக மற்
றொன்றை அவரால் செய்திட முடியும்—

அதாவது நண்பா, இன்றைக்கு தமிழ்மூலம்
அரசாங்க சேவையில் சேருகின்ற தமிழர்
களுக்கு "மொழி நிபந்தனை" விதிக்கப்படு
கிறது— சேவையில் சேருகின்ற தமிழர்கள்
மூன்று ஆண்டுகளுக்குள் சிங்களத்தை படித்து,
சிங்களப் பரீட்சையில் சித்தியடைய வேண்
டும்; இன்றேல் அவர்களுக்கு பதவி உயர்வு,
வேலையில் நிரந்தரம், ஓய்வு ஊதியவாய்ப்பு,
எதுவுமேகிடையாது; சிங்களத்தகுதிகாண்
பரீட்சையில் சித்தியடைய முடியாமல் ஏராள
மான தமிழர்கள் வேலையிலிருந்து வெளியேற்
றப்பட்டிருக்கிறார்கள்; இன்றும் ஆயிரக்கணக்
கானோர் சிங்களம் சித்தியடைய முடியாமல்
தவியாய்த் தவிக்கிறார்கள்!

இத்தகைய 'மொழி நிபந்தனை'' எதுவும்
சிங்களவர்களுக்கு கிடையாது; சிங்களமொழி
மூலம் வேலைககு சேரும் அவர்கள், இத்தகைய
தடை, சுமை ஏதுமின்றி தங்கள் பதவி உயர்வு
வேலைநிரந்தரம் ஆகிவ்வற்றை பெற்றுக்கொள்
கிறார்கள்!

இத்தகைய பாரபட்சத்தை போக்கி—
தமிழர்களுக்கு போடப்பட்டு வரும் "சிங்கள
நிபந்தனை'' போல—அரசாங்கத்தில் சேரும்
சிங்களவர்களுக்கு "தமிழ் நிபந்தனை" போடப்
பட வேண்டும; அல்லது தமிழ் ஊழியர்களுக்கு
மட்டும் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனையை முற்
றுகரத்துச் செய்து விடவேண்டும்! இதில் ஒன்
றைச் செய்வதற்கு வாயளவில் தேனொழுகப்
பேசுகின்ற பிரதமருக்கு ஆற்றல் உண்டா?
துணிச்சல் உண்டா? மனம் உண்டா?

இந்தப்பாரபட்சத்துக்கும் காரணம் சிங்களம்
மட்டும் என்ற கொடிய மொழிச் சட்டம் தான்!

எனவே நண்பா. மும்மொழித் திட்டத்தி
லுள்ள கொடிய நஞ்சினை நாம உணர்ந்து, நம்
முடைய மொழியைபாதுகாத்திட, நம்முடைய
இனத்தை, இனத்தின் தனித்துவத்தினை
பேணிட — ஏற்ற நடவடிக்கைகளிலிறங்கு
வோம்: கூட்டணி இந்த மொழி விஷயத்தில்
சர்வஜாக்கிரதையுடன் செயற்படவேண்டும்!

'லக்சல' 'ஜாதிகபொல', சல்பில, ஜாதிக
சம்பத. காட்டை, போயா, போன்ற ஏராள
மான சிங்களச் சொற்கள் நம்மொழிக்குள் ஏற்
கெனவே திணிக்கப்பட்டுவிட்டன; இந்நிலை
யில் தமிழர் சிங்களத்தை கட்டாயமாகவும்
படித்திடத் தொடங்கின் — நம்மொழியின்
தனித்துவம் நாளடைவில் கெடும் — சிங்களம்
ஊடுருவும் — சிங்களவர் ஆதிக்கமும் ஊடுரு
வலும் அதிகரிக்கும்! முடிவு?

கடலுக்குள் புளி கரைக்கப்பட்
டால், புளிக்குத்தான் அழிவே தவிர
கடலுக்கு எதுவித நட்டமும் இல்லை!
அதுபோலவே சிறுபான்மை இனத்தின்
உரிமைகளுக்கும் சுதந்திரத்துக்கும்
பாதுகாப்பற்ற ஒரு நாட்டில் பெரும்
பான்மை இனத்தின் மொழியை சிறு
பான்மை இனமும் சிறுபான்மை இனத்
தின் மொழியை பெரும்பான்மையின
மும் படித்திடுவதால் நட்டம் -அழிவு-
சிறுபான்மைஇனத்துக்கே-தவிரபெரும்
பான்மை இனத்துக்கல்ல!

**உங்கள் அன்பு தோழன்**

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மீண்டும் ஒருமுறை ஏமாறுவதற்கு தமிழினம் தயாராக இல்லை!"

## வரதர் நூல்வெளியீட்டு விழாவில் எதிர்க்கட்சி முதல்வர் பேச்சு!

"பிரதமர் ஜே. ஆர். ஜெயவர்த்தன இனிமையாகப் பேசுகிறார்; அழகாகச் சிரிக்கிறார்; கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை அள்ளிவீசுகிறார்; ஆனால் இதுவரை இவற்றில் ஒன்று கூட செயல் வடிவம் பெறவில்லை. ஆனால் எந்த ஒரு நிலையிலும் தமிழினம் மீண்டும் ஒருமுறை ஏமாற மாட்டாது என்பதையும், தன்னுடைய இலட்சியத்திலிருந்து பின் வாங்கமாட்டாது என்பதையும் நான் உறுதியுடன் இங்கு கூறிவைக்க விரும்புகிறேன்."

இவ்வாறு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற வரதரின் '24மணிநேரம்' என்ற ஆகஸ்ட் கலவரம் பற்றிய நூல் வெளியீட்டு விழாவுக்கு தலைமை தாங்கிப் பேசிய எதிர்க்கட்சி முதல்வர் அ. அமிர்தலிங்கம் அவர்கள் குறிப்பிட்டார். இந்த விழாவில் திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசியதாவது:-

"காடைத்தனங்களாலும் கலவரங்களினாலும் பயமுறுத்தல்களினாலும் ஒரு இனத்தின் உறுதியை—சுதந்திர எழுச்சியை—அழித்துவிடமுடியாது; நடைபெற்ற சம்பவங்கள் 'தமிழ் ஈழம் என்ற எமது புனிதமான இலட்சியம் மீது இன்னும் உறுதிப்பாட்டையும் அதன் அத்தியாவசியத்தையும் அதிகரித்துள்ளது.

நடைபெற்ற காடைத்தனத்தின்போது, அரசாங்கம் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டத் தவறிவிட்டது. ஒரு அரசின் முதலாவது கடமை அந்த நாட்டிலுள்ள மக்களை பாதுகாத்தலே. அந்தக் கடமையிலிருந்து அரசாங்கம் தவறிவிட்டது. அந்தக் கடமையிலிருந்து தவறியவர்கள் அதற்கானபழியை தமிழர் கூட்டணி மீது கட்டிவிட முயற்சித்தார்கள். ஆகஸ்ட் 18ம் திகதி தேசிய அரசுப்பேரவையில் பேசிய நான், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சம்பவங்கள் பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையே நடந்த மோதல் என்றே எடுத்துரைத்தேன்; ஆனால் எனக்கு பதிலளித்துப் பேசிய பிரதமரோ—இதை ஒரு இனக்கலவரமாக எடுத்துக் கூறி, நடந்த கொலைகளை இன அடிப்படையில் புள்ளி விபரத்துடன் சுட்டிக் காட்டி, 'போரா சமாதானமா'' என்று தமிழர்களைப் பார்த்து கேட்டார். இதன்பின்னரே கலவரம் நாடெங்கும் அதிகரித்தது. இதை யாரும் மறுக்க முடியாது.

நாம் சமாதான வழிகளில் எமது பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள இப்போது மட்டுமல்ல— எப்போதும் தயார்; ஆனால் சமாதானம் என்ற திரையின் கீழ் அடிமைத்தனத்தை ஏற்றுக்கொள்ள நாம் தயாராக இல்லை; 'சுடுகாட்டு' சமாதானத்தை சமாதானம் என்று ஏற்றிட நாம் தயாராக இல்லை; நமது சுயமரியாதையையும் சுதந்திரத்தையும் இம்மியும் கைவிடாமல் ஏற்படக்கூடிய சமாதானத்துக்கு நாம் எப்போதும் தயாராக இருக்கிறோம்.

ஆனால் எந்தக்கட்டத்திலும் நமது இலட்சியத்தை விட்டுக்கொடுக்கப்போவதில்லை; விடுதலையடைந்த மக்களாக நாம் வாழும் காலம் ஏற்பட்டேதீரும்."

### தோழர் வி. பி

நூலை வெளியிட்டு வைத்த சாவதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்த தோழர் திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில் கூறியதாவது:-

"இனப்பிரச்சினையை இரண்டு விதமாகத் தீர்க்கலாம்; சிறுபான்மை இனத்தைப்பெரும்பான்மைஇனம் தனக்குள் விழுங்கி ஜீரணித்துக் கொள்வதன் மூலம். சிறுபான்மை இனத்தின் மொழி, கலைகலாசாரம், பிரதேச பாரம்பரியம்; தனித்துவம் அனைத்தையும் முற்றாக விடுதல்ஒருவழி;சிறுபான்மை இனத்தின் நியாயபூர்வமான உரிமைகளையும் தனித்துவத்தையும் பேணிப்பாதுகாத்து பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையையும் வழங்கி வேற்றுமையில் ஒற்றுமை கண்டு இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது இரண்டாவதுவழி;

"பிரதமர் ஜே. ஆர். முன்வைத்துள்ள மும்மொழி திட்டமும், இருமொழிகளுக்கும் பொதுவான 'லிபி' வேண்டுமென்ற கருத்தும், இரண்டு இனத்தையும் ஒன்றுடன் ஒன்று சங்கமமாக்கும் பின்னணியில் உருவாகியிருக்குமோ என்று சந்தேகப்படுகிறேன்.

"மும்மொழித்திட்டம் வரட்டும்; அதற்கு நான்எதிரியல்ல—ஆனால் அதற்கு முன் தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையும். ஏனைய உரிமைகளும்,பாதுகாப்புகளும்தரப்பட வேண்டும்.

"இந்நாட்டு இடதுசாரி இயக்கங்கள்—நான் சார்ந்துள்ள கட்சி உட்பட—சிறுபான்மை பிரச்சினையில் லெனினிச மார்க்சீய, கோட்பாடுகளை விட்டு விலகி எங்கெங்கோ சென்று இன்று அழிந்து கொண்டிருக்கின்றன. 1944ம் ஆண்டு, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை—பிரிந்து போகும் உரிமை உட்பட—ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்று தீர்மானம் எடுத்த கம்யூனிஸ்ட் கட்சியும், பின்னர் அதிலிருந்து வழுவி எங்கெங்கோ சென்று விட்டது. இந்நாட்டின் அரசியற்கட்சிகளின் தலைவர்களுக்கு முதுகெலும்பில்லாத காரணத்தினால் தான் இங்கு இனப்பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை.

"இனக்கலவரத்தின்போது தமிழர்களை அடித்து உதைத்து "உங்கள் ஊருக்கு போங்கள்'' என்று விரட்டினார்கள்; அரசாங்கமும் கப்பல், விமானம், ரயில் மூலம் தமிழர்களை அனுப்பிவைத்தது. இதன் மூலம் தமிழர்களின் பிரதேசம் என்று ஒன்று இருப்பதை அவர்களே உள்ளூர ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்— அதை அப்படியே வெளியே சொல்ல ஏன் தயங்குகிறீர்கள்?

தமிழரின் பிரச்சினையைத் தீர்த்திட பிரதமர் ஜே. ஆர். ஏதாவது ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்தால் இந்நாட்டு இடதுசாரிகள் அதற்கு பூரண ஒத்துழைப்பு நல்கவேண்டும்— இன்றேல் அவர்கள் இருந்த இடம் தெரியாமல் முற்றாக அழிந்து போவார்கள்."

இவ் விழாவில் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் திரு. வெ. யோகேஸ்வரன் பா. உ. ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

---

## ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்தியத்..!

—6-ம் பக்கத் தொடர்

அரசாங்கப் பிரசாரமும் அரசு-ஆதரவு பிரச்சாரகர்த்தாக்களும்எழுப்பியதுபோல பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவசரகால நிலை பிரகடனப்படுத்தல். பிரச்சினைக்குரிய விடயமல்ல பலாத்கார செயல்கள் பரவுவதிலிருந்து தடுப்பதும் பொதுமக்கள் சுற்றாடலில் அமைதியைப் பாதுகாப்பதும், ஆட்சி நடத்தும் அரசாங்கத்தின் அடிப்படையான கடமையாகும். ஆனால் விளைவுகளிலிருந்தல்லவா அரசாங்கத்திறன் நிர்ணயிக்கப்படுகிறது? — அமைதிக்குப் பங்கம் வராமல் காப்பதும், பயங்கரச் செயல்கள் பரவுவதை தடுப்பதும். கைவிடப்படும்போது அதனால் பாதிக்கப்படுபவர்கள் அமைதி விரும்பும் பொதுமக்கள் தானே!

உண்மையிலே. அரசாங்கம் கூட இனத்துவேஷ மனோபாவத்தைக் கொண்டுள்ளது எனும் சந்தேகம் எழுந்துள்ளது. உதாரணத்துக்கு, பிரதமர் தேசியப் பேரவையிலே த. வி. கூ. மீது தனது புகழ்பெற்ற அறைகூவலை விடுத்தார். "நீங்கள் போரை நாடினால் நானும் போருக்குத் தயாராக உள்ளேன்: சமாதானம்வேண்டுமாயின் அதற்கும் தயார்!'' ஒரு நாட்டின்பிரதமர் எனும்முறையிலே உரையாற்றாமல் ஒரு இனத்துவேஷ வாதி பேசுவது போல வெளிப்படையாக இருந்தது அவருடைய பேச்சு! அவரின் வழிபற்றும் கட்சியினர் பேச அனுமதிக்கப்பட்டதும் நியாயமாகப் படவில்லை.

உதாரணத்துக்கு, துட்டகைமுனுவின் இரத்தம் யூ. என் பி.க்களின் நாளங்களிலே ஓடுகின்றது என எழுதப்பட்ட கோஷங்களும், இத்தகைய நிலைமையைச் சீர்திருத்த உதவுவனவாகப் படவில்லை. சுருக்கிக்கூறின். மக்களைக் காப்பாற்ற அரசாங்கம் தவறிவிட்டது. கலவரங்கள் பெருமடங்காகியதற்கும், நீடித்ததற்கும் காரணமாயிருந்த பொறுப்புக்களிலிருந்து அரசாங்கம் விடுவித்துக் கொள்ள முடியாது.

### அடுத்தது என்ன?

அடுத்தது என்ன?இது இலகுவான அல்லது தள்ளிப் போடக் கூடிய கேள்வியல்ல. வெளிநாடுகளில், முக்கியமாக அருகிலுள்ள இந்தியாவிலே. ஆழ்ந்த கவனம் இச் சமீபத்திய நிகழ்ச்சிகளுக்குக் கிடைத்துள்ளது. குழப்பம் தரக் கூடிய ஒரு சிறப்பம்சமாகும்.

ஸ்ரீலங்காவிலுள்ள இந்தியவம்சவளியினரின்பாதுகாப்பு குறித்து இந்திய அரசுகவனத்திற் கொள்ள வேண்டியதாயிற்று!ஆனால் இதனிலும் பார்க்க முக்கியதத்துவம்வாய்ந்த நிகழ்ச்சி என்னவெனில் தமிழ் நாட்டின் முதலமைச்சர் ஸ்ரீலங்காவிலுள்ள "தமிழர்களைப்'' பாதுகாக்க, இந்திய அரசு நடவடிக்கையில் இறங்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். தமிழ்நாடு அரசுப் பேரவை, ஆளுங்கட்சியினரால் முன்வைக்கப்பட்ட "தமிழ் நாட்டு மக்களின் அவமானப்படுத்தப்பட்ட. வேதனையுடன் கலந்த உணர்ச்சிகளைத் தெரிவிக்கும்'' மசோதாவை ஆராய்ந்து கொண்டிருக்கையிலே சென்னை வீதிகளிலே எதிர்க்கும் தன்மையுள்ள ஒருமைப்பாட்டை. ஸ்ரீலங்காவின் தமிழர்களுக்கு ஆதரவைத் தெரிவிக்குமுகமாக பெருத்த பேரணியொன்று அணிவகுத்துச் சென்றது.

இப்பிரச்சினை சம்பந்தப்பட்ட மட்டிலே, உலகில் தமிழர்வாழும் பிரதான செறிவுள்ள இடமாகிய தமிழ்நாட்டிலே இதற்கு இத்தகையதொரு மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் இவ்வளவு பிரமாண்டமாக நடைபெற்றதில்லை, சிறீலங்காவானது இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளாவிடில் எழப்போகும் கெடுதியையே இது, முன்கூட்டியே குறிகாட்டுகிறது.

### செயற்திட்டம் இல்லாமல்!

இன்னொரு தரம் கூறின், முதன்மையானதும் வழிகாட்டுவதுமான பொறுப்பும் அரசாங்கத்திலேயே தங்கியுள்ளன. இதுவரை காலமும் சுதந்திர ஸ்ரீலங்கா பின்பற்றி வந்த 'பல சமூகங்கள் வாழும் நாடு' எனும் நிலையைப் பாதிக்காமல் இருக்கும் முழுப் பாரிய கடமையிலிருந்து அரசாங்கம் விலகிக்கொள்ளமுடியாது. அரசாங்கமானது உடனடியாகவும் தகுந்த அளவிலும் செயற்படவேண்டும். இதனை அது முக்கியமாகச் சிந்தித்து பெரிய அளவில் செயற்படுத்தவேண்டும்.

யூ. என். பி.யைச் சரித்திர ரீதியாகநோக்கினாலும், அல்லது பிரதமரின் கடந்தகால அரசியல் வாழ்வை நோக்கினாலும், தற்கால நிலைமைகளைச் சமாளிக்கும் பொறுப்பை அவர்களிடமிருந்து எதிர்பார்க்க முடியாது என நாம் வலிந்து கூறலாம். யூ. என், பீ.யும் அதனுடைய அரசாங்கமும், அடைமொழியில் கூறப் போனால், 'கோழித்தூக்கம் போட்டுக்கொண்டிருக்கையில்' சரியாக மாட்டிக் கொண்டன. அதாவது. அவர்களை எதிர்நோக்கும் நிலைமையைச் சமாளிக்கும் வலுவுடைய செயற்திட்டம் அவர்களிடம் இல்லையென்பது தெரிந்துவிட்டது. மாவட்ட சபைகள் ஓரளவுக்கு உதவக்கூடும்; பல்கலைக்கழக அனுமதிகளுக்கு 'தரப்படுத்தலை' நீக்குவதும் ஓரளவுக்கு உதவக்கூடும்; ஆனால் இவை, ஒப்பீட்டளவில் கூறின் பரந்த சமுத்திரத்தில் சிறுதுளிகளே. இப்போதைய நிலைமைக்குத் தேவைப்படுவது என்னவெனில், ஸ்ரீலங்காவிலுள்ள தமிழர்களின் நியாயபூர்வமான, பெரும்பான்மைச் சமூகத்திற்கும் தமக்குமிடையில உண்மையான சமத்துவ நிலை பற்றிய கோரிக்கைகளை அமுல் செய்யும் மொத்தமான செயற்திட்டமே. இதனை யூ. என். பீ. ஒருபோதும் வைத்திருந்ததில்லை; இப்போதைய அரசாங்கத்திடமும் இது இல்லை. இங்கேதான், தற்போதைய நிலைமையின் உண்மையான பயங்கரம் வெளிப்படுகிறது.

(தமிழாக்கம்: ஸ்ரீகாந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்தியத் தமிழகம்

# விழித்தெழுந்துவிட்டது!

பொதுத்தேர்தலுக்குப் பின்னர், நாம் ஹேஷ்யம் சொன்ன மாதிரி, விளைவுகள் அமைந்து விட்டன. நாடாளுமன்றத்தை நோக்குகையில், பெரும்பான்மையான அங்கத்தவர்களுடன் கூடிய யூ.என்.பி. அரசாங்கக் கட்சிக்கு, நேரடியான எதிர்க்கட்சியாக த.வி.கூ. இருப்பதிலிருந்து "சிறுபான்மையினர் பிரச்சினை"யானது தேசிய அரசியலில் முன்னணிக்கு வருமென்பது தெளிவாகியது. திட்டவட்டமாக இது நடந்து விட்டது. சிறுபான்மையினர் பிரச்சினை, அதைச் சரியாகச் சொல்லின் "தமிழர் பிரச்சினை"யானது பூதாகரமாக வெடித்து தற்கால அரசியல் அரங்கில் பிரதான இடத்தை வகிக்கிறது. யூ. என். பி. அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் எல்லாவிதமான பிரச்சார வழிகளாலும் இப்பிரச்சினையை மறைவிடத்துக்குத் தள்ள முடியவில்லை. இப்பிரச்சினையை இனிமேல் தள்ளிப் போட முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. இதனை இப்போதே தீர்த்து வைக்க முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

ஓரளவுக்குப் பார்க்கப் போனால், இப்பிரச்சினையானது இப்போது ஒரு வழியில் தீர்க்கப்படுகிறது. ஆனால் இவ்வழியே, மிகவும் பிற்போக்கானதும் மட்டரகமானதும்; அதாவது இரு சமூகங்களும் பிளவுபட்டு திட்டமான குறித்த பிரதேசங்களில் அடைக்கப்பட்டுள்ளன.

## பயங்கரம்

கடந்த இரு பயங்கரம் நிறைந்த கிழமைகளில் நாம் கண்டு கொண்டதை. 1958 இன் மீளாக்கம் என்று சொல்ல முடியாது. அப்போது, ஸ்ரீலங்காவின் தமிழர்கள் தனிநாடு கோரவில்லை, அக்காலகட்டத்திலே "சிங்களவர்களும் தமிழர்களுக்கும் சம அந்தஸ்து வழங்கப்படவேண்டும்" என்பதே பிரச்சினையாக இருந்தது. அதாவது 'தமிழ் மொழிக்குரிய சம அந்தஸ்து கொடுக்கப்பட வேண்டும்' என்பதே அக்காலப் பிரச்சினை. ஆனால், சமஷ்டிக் கட்சியானது (அக்காலத்திலே, இலங்கைத் தமிழர்களைப் பெருமளவில் பிரதிநிதித்துவப்படுத்திய கட்சி) 'சமஷ்டி அமைப்பை ஏற்றுக்கொண்டால் பெரும்பான்மை — சிறுபான்மைத் தொடர்புகள் பாதிக்கப்படாமல் அமையலாம்' என அன்று தனதுகோரிக்கையை முன்வைத்தது. அப்போது. ஸ்ரீலங்காவிலே ஒரு 'தனித் தமிழ் நாட்டை அமைப்பது; ஸ்ரீலங்காவை இரண்டாகப் பிளப்பது என்பது என்னும் கேள்விகள் எழுப்பப்படவில்லை.

## ஈழம் கோரிக்கை

இன்று, தனியான தமிழ் நாடொன்றை ஸ்ரீலங்காவில் அமைப்பது என்பதே த. வி. கூ. யின் திட்டவட்டமான, ஆதாரபூர்வமான இலட்சியமாக அமைந்துள்ளது. சமஷ்டி ஸ்ரீலங்கா' கோரிக்கையானது கைவிடப்பட்டு விட்டது. த. வி. கூ. யின் தலைவர் திரு, அமிர்தலிங்கம், எதிர்க்கடசித்தலைவர் என்ற கோதாவில் பேசிய பேச்சுக்களிலே, "தமிழர்களுக்கு பிரதேச சுயாட்சி வழங்கப்படக்கூடிய சாத்தியக் கூறுகள் அமைந்து, அப்படி வழங்கப்பட்டாலும், த. வி கூ யானது அதனை, தனது இலட்சியமான தனித்தமிழ்நாடு அமைப்பதற்குரிய ஒரு படியாகவே கொள்ளும்" எனத் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளார். இப்படியாக, த. வி. கூ. யானது 'ஈழம்' கொடியை உயர்த்திவைத்துள்ளது கவனிக்கப்படவேண்டியதாகும்.

## கொலைகள்

நாங்கள் கண்ட, இப்போதும் கண்டுகொண்டிருக்கின்ற, கொலைகள், அங்கசேதங்கள், தீ வைப்பு, கொள்ளையிடல் போன்ற இன்னோரன்ன பயங்கர நிகழ்ச்சிகளின் பின்னணியில், 'ஈழம் பிரச்சினையும்' ஒரு பங்கை வகிக்கின்றது என்பது உணரப்படவேண்டியதாகும்.

யாழ்ப்பாணத்திலுள்ள சில சக்திகள், பிரதானமாக —பயங்கர நடவடிக்கைகளில் ஈடுபடும் இளைஞர்கள், சாதாரணமாக இடம் பெறும் உள்ளூர் பொலிஸ்—பொதுமக்கள் மோதலை பெரிய பிரச்சினையாக்கி, தங்களுக்கிடையே வசித்த 'சிங்கள ஏகாதிபத்திய' அரசின் அதிகாரிகள் மீதும், சிங்கள 'ஊடுருவிகள்' மீதும் கடுமையான தாக்குதலை நடாத்தியுள்ளன என்று, ஐயத்திற்கிடமில்லாமல் ஊகிக்கலாம்.

அதேபோல, சிங்களக் கலகக்காரர்களுக்கிடையிலிருக்கும் சக்திகளும், தமிழர்களை சிங்களப் பிரதேசங்களிலிருந்து 'யாழ்ப்பாணத்துக்கு' அடித்து விரட்டின என்பதையும் ஐயத்திற்கிடமில்லாமல் கூறலாம். இதுவே, பல சமூகங்கள் வாழும் ஸ்ரீலங்காவிலே அவற்றிற்கிடையே நியாயமான உறவுகளை ஏற்படுத்த, இத்தகைய சக்திகள் மேற்கொண்ட தீர்வாகும். "கலந்து வாழ முடியாது! நாட்டின் புறம்பான பகுதிகளில் பிரிந்து வாழவே முடியும்" இதுவே, மேற்குறிப்பிட்ட சக்திகளின் தீர்க்கமான முடிவாகும்.

மிருக பல நம்பிக்கையாளர்களின் மனோநிலையால் ஏற்பட்டுள்ள திகில்களும், சமூகக் கலவரங்களும், ஸ்ரீலங்காவின் எந்தப் பகுதியிலும் இனங்கள் கலந்துவாழ முடியாது என்பதை வெளிப்படையாகக் காட்டுகின்றன.

இதனால் அரசியலமைப்புத் திட்டத்திலே பொறிக்கப் பட்டுள்ள உரிமையான 'ஸ்ரீலங்காவின் எந்தப் பிரஜைக்

# இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிடின் எழப்போகும் கெடுதிக்கு இது முன்னறிவிப்பு

கும் தீவின் எப்பகுதியிலும் சுயமாக வாழமுடியும்' என்பது மீறப்படுவதுடன், தனித் தமிழ் நாட்டுக்கோரிக்கை வலுப் பெறுவதற்கும் இது ஊக்கியாக அமைகிறது. 'தமிழ்—எதிர்ப்பு' நிகழ்ச்சிகள், பெரும்பான்மைத் தமிழர்களை இப்பாதைக்கே இட்டுச் செல்கிறது.

இப்பிரச்சினையானது உடனடியாக. இப்போதே தீர்க்கப்பட வேண்டியதொன்றாகும்—அல்லாவிடில், ஒருநாட்டிலே, ஒன்றாக வாழக்கூடிய சாத்தியக்கூறுகள் அருகிக் கொண்டு வரும்; இதற்குச் சுமுகமான தீர்வும் பின்னர் மேற்கொள்ள முடியாது. இந்த இயலாமையே தேசியப் பொருளாதார பிரச்சினையைத் தீர்க்கவும் தடைக்கல்லாகவிருக்கும்.

## பொலீஸ்

தற்போதய நிலைமைக்குக் காரணமான இன்னொரு பிரதான காரணியும் கவனிக்க வேண்டிய தொன்று; அதாவது, சட்ட நியமங்களில் [illegible]

பொலிசாரில் பெரும் பகுதியினர் பொதுமக்களுடைய நன்மதிப்பை இழந்துவிட்டனர் என்பதும், அவர்களே எல்லைமீறி நடக்கிறார்கள் என்பதும் வெளிப்படை. நடந்த சம்பவங்களை அடக்குவதிலே பொலிசார் பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெறவில்லை என்பது ஒருபுறமிருக்க, நடைபெற்ற சம்பவங்கள் சிலவற்றிலே பொலிசாரே நேரடியானபங்கு கொண்டுள்ளார்கள் என்றும அதிகளவானவற்றில், அவர்களே தீவிர தூண்டிகளாகத் தொழிற்பட்டுள்ளார்கள். அல்லது செயலற்ற முறையில் பார்வையாளர்களாக இருந்துள்ளார்கள் என்றும் தெரிகிறது. சமூகக் கலவரங்கள் வெடிப்பதற்கு அவர்களே பங்குகொள் காரணியாக இருந்துள்ளனர்.

இது தொடர்பாக, இரு விடயங்களை இங்கு குறிப்பிடவேண்டியது அவசியம். ஒன்று, பொலிசார்கள் கூட இனத்துவேஷத்தால் பீடிக்கப்பட்டுள்ளனர். மற்றது, மக்கள் பொலிஸ் அதிகாரிகளை அலட்சியம் செய்யப்படித்

## டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா

துக்கொண்டனர், அல்லது படிப்பிக்கப்பட்டுள்ளனர். முக்கியமாக 1971 பயங்கரவாதத்தின் பின்னர், அதிகாரிகளை அசட்டை செய்ய மக்கள் படித்துக்கொண்டனர்.

தங்களுடைய அரசியல் எதிரிகளுக்கெதிராக பயங்கரச் செயல்களில் ஈடுபடும் ஆதரவாளர்களைப் பாதுகாத்துச் சகித்துக் கொண்டிருக்கும் அரசாங்கள் மூலமாக மக்கள் படிப்பிக்கப்பட்டுள்ளனர். இந்த அவலத்தோற்றமானது, முக்கியமாக. கடந்த பொதுத்தேர்தலின் பின்னர் மேலோங்கியுள்ளது என எம்மால் ஊகிக்க முடியும்; ஏனெனில் யூ.என்.பியை எதிர்த்தவர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட பலாத்கார அலையை நாம் கண்டோம். உத்தியோகபூர்வ அதிகாரிகளின் ஆதரவுடனேயே இவை நடைபெற்றுள்ளன என்று கணிக்க பலத்த குறிகள் காணப்பட்டன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பொலிசார் அருகில் நின்று பார்த்துக் கொண்டே இருந்தனர். இதனால், யூ. என். பி. அரசாங்கத்தை ஆதரிப்பவர்கள் பயங்கர நடவடிக்கைகளில் ஈடுபடின் அவர்கள் பாதுகாப்பு நிர்ப்பீடனம் அளிக்கப்படுவர் எனும் எதிர்ப்பும் உருவாக்கப்பட்டது. யூ. என். பி. அரசாங்கமும் இத்தகைய நிலைமையை உடனடியாகக் கையாளுவதில் அசிரத்தை காட்டியதுடன் தயங்கித் தாமதித்தது.

சமாதான நிலைமையைப் பேணுதல் எனும் கோணத்தில் நின்று பார்க்கையில் யூ. என். பி. அரசாங்கமானது வேகமாகப் பரவி வந்த அவல நிலையைத் திறமையாகக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவருவதில் தவறிவிட்டது என்பதை விளங்கிக் கொள்ளுதல் முக்கியமானதாகும், கொலைகள், கொள்ளையிடல், அங்கசேதங்கள், தாக்குதல்கள் அவமானப்படுத்தல்கள் தீயிடல் உட்படவேறு வகையான பொருட்சேதங்கள் எல்லாம், அரசாங்கம் சக்திவாய்ந்ததடுப்பு முறைகளைக் கையாளாதபடியால் ஒரு கிழமைக்கு மேலாகத் தொடர்ந்து நடைபெற்றன.

—5-ம் பக்கம் பார்க்க

## கட்டுரையாளர் பற்றி...

இக்கட்டுரையை எழுதியுள்ள ட்ராஸ்கீயவாதியான டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா அவர்கள், தமிழுக்கு சம அந்தஸ்து கொடுக்கவேண்டும் என்ற கொள்கையை நீண்டகாலம் வற்புறுத்தி வந்தசமசமாஜக் கட்சியின் தலைவர்களில் ஒருவர்; 1960ம் ஆண்டுக்குப்பின், சிங்களத் தீவிரவாதத்துக்குள் மூழ்கி, சம அந்தஸ்து கொள்கையை காற்றில் பறக்கவிட்டு, தனிச் சிங்களக் கொள்கையை ஏற்றுக் கொண்டது இவரது கட்சி; 1972ம் ஆண்டு மே 22ல், கொண்டுவரப்பட்ட தமிழினத்தை கொல்லும் சட்டமான புதிய அரசியல் சட்டத்தை தயாரித்தவர்; தாம் தயாரித்த அரசியலமைப்பில் தமிழரசுக்கட்சி விரும்புவதுபோல ஓர் எழுத்தைக் கூட மாற்ற மாட்டேன் என்று தேசிய அரசுப் பேரவையில் ஆணவத்துடன் அறிவித்தவர்; 1970 முதல் 1976 வரை முந்திய அரசாங்கம் ஈழத் தமிழர்களுக்கு இழைத்த கொடுமைகளில் இவருக்கும் இவரது கட்சிக்கும் சம பங்கு உண்டு;

அப்படிப்பட்ட ஒருவரின் இன்றைய சிந்தனை—அதாவது ஆகஸ்ட் கலவரத்துக்கு பின்னர் ஏற்பட்ட சிந்தனை இது. 'சோசலிஸ்ட் நேஷன்" என்ற சமசமாஜக்கட்சியின் ஆங்கில வார ஏட்டின் 9-9-77 இதழில் 'இலங்கையிலே பலாத்காரம்' என்ற தலைப்பில் வெளிவந்த டாக்டரின் கட்டுரையிலுள்ள முக்கிய பகுதிகள் இங்கு இடம் பெற்றுள்ளது. —ஆர்

## வவுனியா நக...

—3-ம் பக்கத் தொடர்

ஏற்க மறுத்தனர். இக் கோஷ்டி பின்பு கடைவீதிப் பக்கமாகத் திரும்பி தெருவில் வந்த தமிழர்களை ஏசி அடித்து துப்பிய வண்ணம் ஜீவாஸ்ரோஸினுள் புகுந்து கணக்கப்பிள்ளையுடன் தகராறுப் பட்டு பின்னர்—தங்கையாவின் வெற்றிலைக் கடையினுள் புகுந்து தங்கையாவிற்கு அடித்தனர்.

இதன்பின்னரே தேன் சுரபிக்கு வந்து போத்தல்களை உடைத்து அட்டகாசம் புரிந்து காசாளருக்கும் மற்றும் சிப்பந்திகளுக்கும் அடித்தார்கள் அச்சமயம் அங்கிருந்த கடைமுதலாளியாலும் சிப்பந்தியினராலும் அங்கு தேனீர் அருந்திக் கொண்டிருந்த யாழ் நோக்கிப்பயணம் செய்த மூன்று ராணுவ வீரர்களாலும் இக் காடையர்கள் கடையை விட்டுக் கலைக்கப்பட்டனர். அவர்கள் மில் வீதியால் ஓடினர். இக் காடையர்கள் தேன்சுரபியில் சாப்பிடவுமில்லை. பணம் கொடுக்க மறுக்கவுமில்லை, கடையை உடைக்கும் நோக்குடனே இவர்கள் கடைக்கு வந்தனர்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய அரசுப் பேரவையில் அமிர்தலிங்கம் (3)

# "தமிழன் தனியாட்சி நடத்திய வரலாற்றை யாரும் மூடி மறைத்துவிட முடியாது!"

## காணி விவசாய அமைச்சருக்கு எதிர்க்கட்சி முதல்வர் சாட்டை!

கௌரவ விவசாய அமைச்சர் தமது பேச்சில் சரித்திரத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்: இந்நாட்டின் சரித்திரத்தைப் பற்றி இப்பொழுது பேசுவதற்கு நேரம் போய்விட்டது. ஆனால் உவால்டர் சுவார்ஸ் எழுதிய நூலில் இலங்கைச் சரித்திரச் சுருக்கம் பற்றிய மூன்றே மூன்று வசனங்களை வாசிக்கிறேன்.

திரு. நந்தா மத்தியூ:- மாவம்சம் எங்கே?

திரு. அ. அ:- நான் மாவம்சத்திலிருந்து வாசிக்கவில்லை. மாவம்சம் மேற்கோள் காட்டப்படுவதை இவர்கள் விரும்புவதாயுமில்லை. இங்கு எடுத்துக்காட்டுவதற்காகத்தானும் அவர்கள் அதை அறிந்து கொள்ளவும் விரும்பவில்லை.

உறுப்பினர் ஒருவர்:- மாவம்சத்திலிருந்து தப்பாக மேற்கோள்களைக் கூறுகிறீர்கள்.

திரு. அ. அ:- நான்வாசிப்பது மாவம்சத்திலிருந்தல்ல. உவால்ட்டர் சுவார்ஸின் நூலிலிருந்தே.

உறுப்பினர் ஒருவர்:- யார் அவர்?

திரு. அ. அ:- சிறுபான்மை உரிமைக் குழுவிற்காக இச் சிறு நூலை அவர் தயாரித்துள்ளார். அவர் 'கார்டியன்' அல்லது அத்தகைய செய்தித்தாள் ஒன்றினைச் சேர்ந்தவர்.

திரு. லலித் அத்துலத்முதலி:- அவர் அயர்லாந்தைப் பற்றி ஏதாவது சொல்லுகிறாரா?

திரு. அ. அ:- இது இலங்கையிலுள்ள தமிழர்களைப் பற்றியது. உலகின் பல்வேறு நாடுகளிலுமுள்ள சிறுபான்மையினர், தேசிய இனங்கள் என்பனவற்றின் பிரச்சினைகள் தொடர்பாக சிறுபான்மையோர் உரிமைக்குழு இதே தொடரில் பல சிறு நூல்களை வெளியிட்டிருப்பதை கௌரவ உறுப்பினர்கள் அறிவார்கள். இதே தொடரரில் இந்த நூல் 25-வது பிரசுரம்.

கௌரவ சபாநாயகர்:— அது பர்னுட்ஷோவாக இல்லாது இருக்கும்வரை பரவாயில்லை.

திரு. அ. அ.- இதுதான் அவரின் கூற்று;

"ஆதிக்குடியேற்றமும் அரசியல் வரலாறும் தொடர்பான உண்மைகள் அறியப்படமுடியவில்லை, இரு பகுதியினரதும் கட்டுக்கதைகளினால் இவை மேலும் இருளடைகின்றன. ஆனால் கிறிஸ்துவின் முன் 5-ம் அல்லது 6-ம் நூற்றாண்டில் ஆரம்பித்த ஆரிய (சிங்கள) சகாப்தத்தின் ஆரம்பகாலத்திலேயே திராவிடர்கள் (தமிழர்) இத்தீவில் இருந்திருக்கிறார்கள் என்பது விவாதத்துக்கு அற்பாற்பட்டது; முதன்முதல் ஐரோப்பிய படையெடுப்பாளர்களாகிய போர்த்துக்கேயர் கிறிஸ்துவின் பின் 16ம் நூற்றாண்டில் இந்நாட்டுக்கு வந்தபொழுது தெற்கே சிங்களவர்களுக்கும், வடக்கே தமிழர்களுக்குமான தனித் தனி பழமைமிகு இராச்சியங்கள் இருந்ததைக்கண்டார்கள். போர்த்துக்கேயரின் கீழும் அவர்களை அடுத்துவந்த ஒல்லாந்தரின் கீழும் இவ்விராச்சியங்கள் தனித்தனியாகவே இருந்து வந்தன. 19ம் நூற்றாண்டில் பிரிட்டிஷார் (இலங்கைக்கு) வரும்வரை இவ்விராச்சியங்கள் இரண்டும் ஒரு தனி நிருவாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டதில்லை. (இடைக் குழப்பம்)"

இதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. திட்டமிடல் பொருளியல் விவகாரப்பிரதி அமைச்சர் நான் தெளிவுபடுத்திக்கொடுக்கத் தேவையற்ற அளவிற்குவரலாற்றை நன்றாக அறிந்தவர்.

ஜனாப் எம். எச். எச். எம். நைனா மரிக்கார்— (பிரதி அமைச்சர்):- யார் எழுதிய நூல்? என்பதை அறிய விரும்புகிறோம்.

திரு. அ. அ. சரித்திரத்தைத் திரித்துக்கூறும்பொழுது நாம் மௌனிகளாக இருந்தோம் என்று எவராவது கூறுதிருக்கும்பொருட்டு ஏட்டில் இவை பதிவுபெற வேண்டும் என்பதற்காக இவற்றை இச்சபை முன் வைக்கின்றேன்.

சபாநாயகர்:- கௌரவ கல்வி அமைச்சர் இது வரலாறுக்கு முரண்பட்டது என்கிறார்.

திரு. அ. அ:- இருக்கலாம். அவரால் இயலுமானால் சரியான வரலாற்றை எமக்குப் படிப்பிக்கட்டும்.

திரு. நிஸங்கா பீவிஜயரத்தின:- இவர் அதைப் புரிந்து கொள்ள முடியாது போகலாம். அது ஒரு கஷ்டமான விஷயம்.

திரு. அ. அ:- கௌரவ கல்வி அமைச்சரை நாம் சிறிது நன்றாகவே அறிந்திருக்கின்றோம்.

திரு. எம். சிவசிதம்பரம்:- அவர் எமது தகுதி வாய்ந்த அதிகாரியாக இருந்தார்.

திரு. அ. அ:- நல்லூர் உறுப்பினர் கூறுவது போல அவர் கௌரவ அத்தனகல உறுப்பினர் (திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா)வினால் நியமிக்கப்பட்டு ஓராண்டு காலம் தகுதி வாய்ந்த அதிகாரி யாகவும் யாழ்ப்பாணத்தின் இராணுவ தேசாதிபதியாகவும் விளங்கினார்.

திரு. நிஸங்கா பீ. விஜயரத்தின:- அவர் (அத்தனகல உறுப்பினர்) உங்களுக்கு இதனிலும் பார்க்க வேறென்ன சிறந்த சலுகை காட்டியிருக்க முடியும்.

திரு. அ. அ;- கலாநிதி சி. ஆர். த. சில்வா— அவர் ஒரு தமிழன் என்று இவர்கள் சொல்லமாட்டார்கள்.

திரு. நிஸங்கா பீ. விஜயரத்தின:- நாம் அறியோம். நாம் அறிந்தவரை நீங்கள் ஒரு சிங்களப் பரம்பரையினராயும் இருத்தல் கூடும்.

திரு. அ. அ!- கௌரவ கல்விஅமைச்சர் எவரைப் பற்றியும் எதுவுமே தெரிந்து கொள்ளும் நிலையில் இந்நேரத்தில் இல்லை.

சபாநாயகர்:. அவர்நிரந்தரமான திறந்த மனதுடையவர்.

திரு. மு. சிவசிதம்பரம்.- வெறிச்சோடிய ஒரு மனதுள்ளவர்.

திரு. அ.அ:- சுடந்தகாலத்தில் இவரைப் பற்றி நாம் அறிந்திருக்கிறோம். அதாவது அவர் எதுவுமே தெளிய முடியாத நிலையில் இடைக்கிடை இருப்பது வழக்கம் ஆனாலும் இந்தக் கணம் அவர் அந்த நிலையில் இல்லை என்றே நினைக்கின்றேன் பல்கலைக் கழகத்தில் அவர் எனக்கு மூத்த மாணவராயிருந்தார் என நினைக்கிறேன். நான் பல்கலைக் கழகத்தில் சேர்ந்ததும் இவர் சிந்தனைத் தலைவர்களுள் ஒருவரென நாம் கருதினோம். ஆனால்— நான் வருத்தப்படுகிறேன்— வெகு வேகமாக அந்த நிலையிலிருந்து இவர் வீழ்ச்சியடைந்து விட்டார்.

கௌரவ சபாநாயகர்.- அவர் [இப்போது]முன்னேறியிருக்கிறார்.

திரு. அ. அ:- கலாநிதி சி. ஆர். த. சில்வாவின் "போத்துக்கேயர் ஆட்சி" என்ற நூலில் 45வது பக்கத்திலிருந்து வாசிக்கின்றேன்.

"கண்டி இராச்சியத்துக்கு கூலி இராணுவம் போவதை யாழ்ப்பாண இராச்சியம் அனுமதித்தோ, உதவியோ நடந்ததால் இந்த யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்ற போர்த்துக்கேயர்விசேட முயற்சி எடுத்திருப்பதாகத் தெரிகிறது"

போர்த்துக்கேயருடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்ட யாழ்ப்பாணத்து அரசன் கண்டி மன்னனுக்கு உதவும் பொருட்டு தனது பிரதேசத்துக் கூடாக இராணுவம் செல்வதை அனுமதித்திருக்கிறான் எனவே யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்ற வேண்டும் என்று போர்த்துக்கேயர் நினைத்தார்கள். இன்று இங்கே நாம் ஒரு வேதனையான நிலபரத்தை காண்கிறோம். விதியின் விளையாட்டு! அதாவது (இதே) கண்டியின் பிரதிநிதியாக இங்கு இருக்கும் உறுப்பினர் யாழ்ப்பாணம் என்றொரு இராச்சியம் என்றுமே இருந்ததில்லை என்கிறார்.

திரு, றணில் விக்கிரமசிங்கா;- சென்றத் என்ற மன்னன் யாழ்ப்பாண மக்களை விடுதலை செய்ய கண்டியிலிருந்து ஒரு இராணுவத்தை இருமுறை அனுப்பிருந்தான் என்று அதேநூலில் இல்லையா? (இடைக் குழப்பம்)

திரு, அ. அ:: அதை நாம் மறுத்துரைக்கவில்லை. யாழ்ப்பாண இராச்சியம் என்று ஒன்று இருந்திருக்கின்றது. சரித்திரத்தின் சிக்கலை விவாதிக்க முனையாதிருப்போமாக. கண்டிப் பிரதிநிதியாகவிருக்கும் கௌரவ அமைச்சர் யாழ்ப்பாண இராச்சியம் ஒன்றுஎன்றுமே இருந்ததில்லை என்றார் யாழ்ப்பாண இராச்சியம் சியம் அழிந்தது இதைத்தான் கலாநிதி சில்வா (தனது நூலில்) கூறுகிறார். 1619ம் ஆண்டில் போர்த்துக்கேயர் இந்த இராச்சியத்தைக் கைப்பற்றினர்— (இடைக் குழப்பம்) — நான் வாசிக்கும் இது அந்த நூலிலிருந்து எடுத்த ஒரு பகுதி தான்.

திரு. ஏ- எம். ஆர். பி. அத்தநாயகா:- (சிங்களத்தில் ஏதோ கூறுகிறார்)

திரு. அ. அ:- சபாநாயகர் அவர்களே! அவர் கூறுவது (அவர் தெரிவிப்பது போல) ஒழுங்குப் பிரச்சினை அல்ல, கௌரவ உறுப்பினர் என்ன சொல்லுகிறார் என்பது எனக்கு விளங்கவில்லை. எவ்வாறாயினும் நான்தான் இப்போழுது பேசிக் கொண்டு நிற்கின்றேன். (அதாவது வேறொருவர் இப்பொழுது பேச உரிமை இல்லை)

திரு. ஆர். ஜே. ஜி. த. மெல்:- கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் வரலாற்றிலிருந்து சரியாகவும் தவறாகவும் மேற்கோள் காட்டியிருந்தார். ஆனாலும் சரித்திரத்தில் பதிககப்பட வேண்டிய நோக்கங்கருதி கேட்கிறேன். தேர்தலுக்கு முன்னர் திருமதி பண்டாரநாயகாவுடன் அவர் நிகழ்த்திய இணக்கப் பேச்சுக்கள் பற்றி இச்சபைக்குத் தெரிவிப்பாரா? அது மிகவும் சீவாதாரமானது.



திரு. காமினி திஸநாயகா: நான்கேட்டது அதைத்தான்.

திரு. அ. அ:- நான் அதை வெளிப்படுத்துகிறேன் கௌரவ அத்தனகலை உறுப்பினருடன் (திருமதி பண்டாரநாயகா பேச்சு வார்த்தை நடத்தினோம் ஒருமுறை அல்ல—பலமுறை! இன்றைய பிரதமருடனும் பேசினோம். கம்யூனிஸ்ட்கட்சித் தலைவருடனும் பேசினோம். சமசமாஜக் கட்சித் தலைவர்களுடனும் பேசினோம். திரு, சுபசிங்கா கூட்டத்தினருடனும் பேசினோம். எல்லா அரசியற் கட்சிகளுடனும் பேசியிருக்கிறோம். இந்தப் பிரச்சினையை சமாதானமாகத் தீர்த்து வைக்கக்கூடிய சாத்தியக் கூறுகளை ஆராய விரும்பினோம்; இன்றும் ஆராய முயன்றுகொண்டிருக்கிறோம். இதைத்தான் நான் சொல்வேன். நிச்சயமாக நாம் எம்மாலியன்றளவு முயற்சிக்கின்றோம். சரித்திரத்துக்குள் நுழையமேலும் நான் விரும்பவில்லை.

திரு. ஆர். பிரேமதாஸ:- நாம் இது தொடர்பாக கருத்தரங்கொன்றை ஒழுங்கு செய்வோம்.

திரு. அ. அ:- ஆம்! நீங்கள் ஒழுங்கு செய்யலாம். ஆனால் கல்வியமைச்சரிலும் பார்க்கத் தகுதியுடைய ஆசிரியர்களை நாம் தேடிப்பிடிக்க வேண்டும். கல்விக்குப் பொறுப்பாக அவர் இருப்பதனால் அவர் வேண்டிய ஆசிரியர்களைப் பிடிக்க முடியுமென நினைக்கிறேன். படிப்பிக்க அவருக்கு முடியாது போனாலும் படிப்பிப்பவர்களை அவர் தேடிப் பிடிக்க முடியும்.!

—வளரும்.

---

—2-ம் பக்கத் தொடர்

நயவஞ்சகர்செயலை செய்வார்கள் என்று கனவிலும் எண்ணவில்லை; இக்கொலையிலீடுபட்டவர்கள் இன்னும் என் தந்தையிடம் கடனாகவாங்கிய நெல்மூடைகளும் உரப்பசளைகளும்திருப்பித்தரவில்லையென்பது எங்களுக்கு நன்றாகத்தெரியும். இப்போதும் அவர்கள் வாங்கியகடனை திருப்பிதரவில்லையென்பதை ஒப்புக் கொள்வார்கள். பிறர் பணத்தை வாங்கி ஏமாற்றி வயிற்றை வளர்க்கும் இவர்கள் மனித பிணத்தையும் உண்பார்கள் என்பது இன்றுதான் அதாவது என் தந்தையின் கொலைக்குப்பின்தான் எனக்குத் தெரிகிறது: எங்கள் அப்பா, புகையிரதநிலைய எழுதுவினைஞராக இருந்து சிங்களம்படிக்கவிரும்பாமல் தன்பதவியை ராஜிநாமாச் செய்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்கள் கேட்...

—1-ம் பக்கத் தொடர்

மையா? என்று மக்கள் மத்தியில் கேட்கப்படுகிறது.

இது இப்படியிருக்க சிறீ லங்கா சுதந்திரக்கட்சிப் பத்திரிகையான 'THE NATION' தனது 1-10-77 இதழில் பின் வரும் செய்தியை வெளியிடப்பட்டிருந்தது. அது இதுதான்:

"A News item that failed to receive publicity was the participation of an important minister at the funeral of a suspected looter who was shot dead by the police"

(பொலிசாரினால் சுட்டுக் கொல்லப்பட்ட கொள்ளைக்காரர் என்று சந்தேகிக்கப்படும் ஒரு நபரின் மரணச் சடங்கில் ஒரு முக்கிய மந்திரி கலந்து கொண்டது பற்றிய செய்தி விளம்பரம் பெறத்தவறி விட்டது)

நேஷனலில் வெளிவந்த செய்தி இதுவரை அமைச்சரவையினால் மறுக்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

## பிடி மண்ணெடுத்து...

—1-ம் பக்கத் தொடர்

டாலும் சரி அவர்களை அப்புறப்படுத்தி எமது தேவையைப் பூர்த்தி செய்க' என்று சுயநலக்கோஷம்எழுப்பினர்

வேறு சிலர் பழிவாங்கும் சந்தர்ப்பமாக இதைப் பாவித்து "தொண்டர்கள் சம்பளம் பெறுகிறார்கள் இதுவே முகாமை மூடாததற்குக் காரணம்" என்று தம்நலம் கருதாது சேவை செய்த தொண்டர்மீது பெரும் அபாண்டத்தைச் சுமத்தினர். தொண்டர்கள் எவரும் கூலி பெறுது, பாதிக்கப்பட்டோர் எமது தமிழ்ச் சகோதரர்கள் என்ற ஒரே உண்மைக்காகச் சேவை செய்தனர் என்பதே முழு உண்மை. சேவை செய்யவும் விரும்பாது, சேவை செய்தவர்களையும் இன்னல்களுக்குள்ளாக்கிய கோடரிக்காம்புகளின் வேண்டுகோள்களுக் கிணங்க முன்னறிவித்தல் எதுவுமின்றி 7-10-77ல் முகாம் திடீரென மூடப்பட்டது.

இவையாவும் கடந்த ஒன்றரை மாதங்களாகப் பல இன்னல்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் மத்தியில்மற்றைய முகாம்களிலும் கூடிய காலமாக 250 பாதிக்கப்பட்ட சகோதரர்களுடன் வெகு சிறப்பாக இயங்கிவந்த கொழும்புத்துறை முகாமில் நடைபெற்ற உண்மைச் சம்பவங்களாகும்.





ரோயல் நிலத்தினைத் தயாரித்து விற்பனை செய்யும் சிவா இன்டஸ்ரீஸாரின் மற்றுமோர் தயாரிப்பு

**ரோயல் ஜெலி கிறிஸ்டல்**

மற்றும் ஏனைய தயாரிப்புகள்

**ரோயல் பேக்கிங் பவுடர்**
**ரோயல் கஸ்டட் பவுடர்**
**ரோயல் கோன் பிளவர்**
**ரோயல் பிஸ்மக்ஸ்**
**ரோயல் நீலம்**

தயாரித்து விற்பனை செய்வோர்
**சிவா இண்டஸ்ட்ரீஸ்**
118-1/3 நாலாம் குறுக்குத்தெரு கொழும்பு-11

**"நீம் சுகாதார தூபம்"**

வேம்பினின்றும் நவீன முறையில் தயாரான "நீம் சுகாதார தூபம்" நறுமணம் கமழ்ந்து, பூச்சி, புழு ஆகியவற்றை அற்புதமாக அகற்றுகின்றது. வாங்கி உபயோகியுங்கள்.

**ஓர் மில்க்வைற் தயாரிப்பு**

**கிங்ஸ்லி** (கொழும்பு) 12-வது வெற்றி வாரம்!

சிவாஜி கணேசன், தேவிகா, கமலஹாசன், ஜெயசித்திரா, மஞ்சுளா— நடித்த

**சத்யம்** (ஈஸ்ட்மன் கலர்)

3-வது வாரம்

**பிளாசா**

ஜெமினி, கே. ஆர். விஜயா நடித்த-

**தசாவதாரம்** [ஈஸ்ட்மன் கலர்]

**வெலிங்டன்** (யாழ்நகர்) 4வது வாரம்

ஜெய்சங்கர்
— நடித்த —

**துணிவே துணை**
(கலர்)

6-வது வாரம்

**கெப்பிட்டல்** (கொழும்பு)

ஜெய்சங்கர், முத்துராமன், பத்மினி நாகேஷ்
—நடித்த—

தேவரின்

**பெண் தெய்வம்**

2-வது வாரம்

**லிடோ** (யாழ்ப்பாணம்)

எம். ஜி. ஆர். லதா
நடித்த —

**நீதிக்கு தலை வணங்கு**
(ஈஸ்ட்மன் கலர்)

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

**செல்லமகால்** (கொட்டாஞ்சேனை)

எஸ். எஸ். ராஜேந்திரன்
விஜயகுமாரி,
சகஸ்ரநாமம்,
ரங்கராவ்,
எம். வி. ராஜம்மா,
மற்றும் பலர் நடித்த

**சாரதா**

(புத்தம் புதிய கொப்பி)

3-வது வாரம்

**கெயிட்டி** [கொட்டாஞ்சேனை]

ஜெமினி கணேசன், சௌகார் ஜானகி, கே. ஆர். விஜயா, ஜெயசித்ரா, ஸ்ரீபிரியா, எம். ஆர். ராதா, ரவிகுமார், சீர்காழி கோவிந்தராஜன், எம். ஆர். ஆர். வாசு, வீ. எஸ் ராகவன், கோபி கிருஷ்ண, மேஜர் சுந்தரராஜன் நடித்த-

**தசாவதாரம்**

(ஈஸ்ட்மன் கலர்)


இப்பத்திரிகை கொழும்பு.-12, 194ஏ, பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்தாரால் 1977ம் ஆண்டு அக்டோபர் மாதம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது: அச்சுப் பதிப்பு: வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org